කුඩා තේ වතු සංවර්ධන අධිකාරිය

**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**

# Tea Small Holdings Development Authority

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

*2017*

**නො 70,පාර්ලිමේන්තු පාර,පැලවත්ත,බත්තරමුල්ල**
**இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை**
**No: 70, Parliament Road, Pelawatte, Battaramulla**
**දුරකථන අංක தொலைபேசி Tele : 7909021/22**
**ෆැක්ස් தொலைநகல் Fax : 2784925/28**
**ඊ මේල් மின்னஞ்சல் Email: gmtshda@gmail.com /aetshda1@gmail.com**

# தொலைநோக்கு

**பொருளாதார மற்றும் சமூக ரீதியாக ஸ்திரத்தன்மை வாய்ந்த சிறுதேயிலை பற்றுநிலங்கள் சமூகமொன்றைத் தோற்றுவித்தல்**



# பணிநோக்கு

**சிறந்த துணைச் சேவைகளை வழங்குவதனூடாக தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தித் திறனையும் தரத்தையும் விருத்தி செய்தல்**

## *தலைவரின் வாழ்த்துச் செய்தி*



பெருந்தோட்ட பயிர்களிடையே தேயிலை பிரதான இடத்தை வகித்து வருகின்றது. 1991 ஆம் ஆண்டில் 50.3% வீதத்தினால் தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்து, படிப்படியாக வளர்ச்சியடைந்த தேயிலை சிறு பற்றுநிலங்களின் உற்பத்திப் பங்களிப்பானது 2017 ஆண்டில் 75.5% வரை அதிகரித்துக் காணப்பட்டது. கடந்த பத்தாண்டுகளில் ஆகக் குறைந்த உற்பத்தி அறிக்கையிடப்பட்ட, 2009 ஆண்டின் தேசிய உற்பத்தி 291 கிலோ மில்லியனாகும். அந்த ஆண்டின் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தி 201.9 கிலோ மில்லியனாக காணப்பட்டது. அவ்வாறே 2016 ஆண்டில் தேசிய உற்பத்தியில் பின்னடைவு கண்டபோதிலும், 2017 ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தியை 307.72 கிலோ மில்லியன் வரையில் அதிகரித்துக் கொள்ள முடிந்தது. அதற்கு நிகராக தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தியும் 2009 ஆண்டுக்கு ஒப்பீடாக 30.52 கிலோ மில்லியனால் 2017 ஆண்டில் அதிகரித்துக் காணப்பட்டது.

தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையானது 2017 ஆம் ஆண்டில் நிதி உதவியினூடாக அரச அனுசரணையைப் பெற்ற ஒரு ஆண்டாக விளங்குகின்றது. ஒரு ஹெக்ரயாருக்கு ரூபா 15000 வீதம் ஒரு ஹெக்ரயாருக்கு குறைந்த நிலப்பரப்பினைப் கொண்ட 139713 தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்கள் தொடர்பாக ரூபா 903.894 மில்லியன் வழங்கப்பட்டது.

தேயிலை உரத்திற்கான நிதிச் சலுகை தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு 2017 ஆண்டில் வழங்கப்பட்டது. அது குறித்த நிலப்பரப்புக்கள் 60259.0 ஹெக்ரயார்களாகும். அவ்வாறே 2017 ஆண்டின் மே மாதத்தில் நிலவிய பாதகமான காலநிலை காரணமாக இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் வெள்ளம், மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்கள் தொடர்பாக அரசாங்கத்தினால் ரூபா 225.6 மில்லியன் தொகை 12716 எண்ணிக்கையான தேயிலை செய்கையில் ஈடுபடுவோருக்கு நட்டஈடாக வழங்கப்பட்டது. இப் நடவடிக்கையில் போது தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களை மையமாக கொண்டு அரச நிதிசார் தேயிலை நிவாரணம் மற்றும் வெள்ளம், மண்சரிவு குறித்த நட்டஈடு என்பன தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. 2017 ஆண்டிறுதி வரை தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட சிறு தேயிலை பற்றுநில அபிவிருத்திச் சங்கங்களின் எண்ணிக்கை 1435 வரை அதிகரித்துள்ளன.

எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுக்கு (2016) நிகராக தேசிய தேயிலை உற்பத்தி 5.2% வீதத்தினால் அதிகரித்தது போன்று, தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தியும் 6.6% வீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. தேயிலை மீள் பயிரிடல் நிலப்பரப்பும் ஒரு ஹெக்ரயாருக்கு 748 ஆக இருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டுக்கு நிகராக தேயிலை சிறு பற்றுநிலங்கள் உரிமையாளர்களுக்கு பச்சைக் கொளுந்து ஒரு கிலோவுக்கு செலுத்தப்பட்ட விலையானது, வருடாந்தம் சாதாரணமாக ரூபா 90.59 வரை அதாவது ரூபா 22.16 ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. தொழிலாளர் கிரயம் மற்றும் உரம் போன்ற உள்ளீட்டுச் செலவுகள் அதிகரித்தமையின் அடிப்படையில், 2017 ஆண்டில் தேயிலை மீள் பயிரிடல் செலவு மீண்டுமொரு முறை அதிகரித்தமையானது தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையானது முகங்கொடுக்க நேர்ந்த விசேட சிக்கலாக இருந்தது.



**தேசபந்து விஜேரத்ன தெவகெதர**
**தலைவர்**

## 2017 இல் இலங்கையில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை...



விஸ்தரிப்பு - 14 மாவட்டங்களில் 123 பிரதேச செயலகப் பிரிவுகள் பூராவும் விஸ்தரிக்கப்பட்ட இலங்கையின் முழுமொத்த சனத்தொகையில் 10% விகிதாசாரத்தை பிரநிதித்துவம் செய்கின்றது.

பங்களிப்பு - வருடாந்த தேயிலை உற்பத்தியின் 75.5% வீதமான எமது பங்களிப்பானது ரூபா 1438 பில்லியன் அந்நியச் செலாவணியாக அதிகரித்துள்ளது.

முதலீடு - i 2256 ஹெக்ரயார் நிலப்பரப்பில் ரூபா 7219 மில்லியன் ஆன முதலீட்டினை தேயிலை மீள் பயிர்செய்கை தொடர்பாக ஈடுபடுத்தல்.

ii ரூபா 13200 மில்லியன் தொழிலாளர்களை முதலீடாக கொண்டு பயிர்செய்கையை பேணிச் செல்வதற்காக ஈடுபடுத்தல்.

அதற்கமைய ரூபா 20000 மில்லியன் தொகைக்கு கிட்டிய வருடாந்த நிதிசார் முதலீட்டினை வழங்குகின்ற தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை தொடர்பாக தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையினால் சேவை வழங்கப்படுகின்றது.

## தேயிலை சிறு பற்றுநில துறையின் பயன்விளைவுச் சுட்டி - 2017

| | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| 1. தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்பு (ஹெக்ரயார்) | 121,740 | 121,967 | 122,169 |
| 2. தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் எண்ணி | 392,979 | 393,420 | 395,414 |
| 3. தேயிலை சிறு பற்று நில துறையின் தேயிலை உற்பத்தி ( கிலோ மில்லியன்) | 239.86 | 218.068 | 232,417 |
| 4.தேசிய உற்பத்தியில் தேயிலை பற்றுநிலங்களின் பங்களிப்பு வீதம் | 73.0 | 74.5 | 75.5 |
| | 2059 | 1872 | 1995 |
| 5. சாதாரண உற்பத்தித்திறன் (தேயிலை/கி.கி./ஹெக்.) | 806 | 733 | 748 |
| 6. தேயிலை புதிதாக பயிரிடும் பயிர் நிலங்கள்/ ஹெக்ரயாருக்கு (ஊக்குவிப்பு கொடுப்பனவின் கீழ்) | 479 | 109 | 202 |
| 8. தேயிலை மீள் பயிரிடல் வீதம் (%) | 0.80 | 0.73 | 0.75 |
| 9. பயிர் புனர்ஜீவனம் – செடி எண்ணிக்கை (மில்.) | 0.309 | 0.369 | 0.564 |
| 10. தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கங்கள் | | | |
| சங்கங்களின் எண்ணிக்கை | 1394 | 1403 | 1435 |
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 271,272 | 340,006 | 329,778 |
| 11. விஸ்தரிப்பு மற்றும் ஆலாசனை சேவை | | | |
| தனிநபர் விஸ்தரிப்பு சேவைகள் எண்ணிக்கை | 31,331 | 33,385 | 33,373 |
| குழுநிலை நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணி. | 6,544 | 7,082 | 6680 |
| விவசாயிகளின் பங்கேற்பு | 188,118 | 237,333 | 188,085 |
| 12. நிறுவனத்தின் செயற்பாட்டுக் கிரயம் (01ரூபாவிற்கான அபிவிருத்தி) | 0.54 | 0.56 | 0.52 |
| 13' தே. விஸ். அலுவலர் ( தேயிலை விவசாயி விகிதாசாரம் | 1:2748 | 1:2751 | 1:2751 |
| 14' ஒரு கிலோ சாதாரண பச்சைத் தேயிலையின் விலை ரூ. | 58.80 | 68.53 | 90.69 |

# உள்ளடக்கம்


- 2017 ஆண்டில் இலங்கையின் தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவு iv
- தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவின் பயன்விளைவுச் சுட்டி - 2017 v
- உள்ளடக்கம் v
- அட்டவணை vii
- உருப்படங்கள் viii
- நிறுவக கட்டமைப்பு
  பிரதான அலுவலகம் மற்றும் ஹந்தானை பயிற்சி நிலையம் ix
  பிராந்திய அலுவலகங்கள் x
- பணிப்பாளர் சபை xi
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு xii
- பதவிநிலை பணியாட் தொகுதியினர் நிர்வாக மாவட்ட அலுவலகங்கள் xiii

**பொழிப்பு** **1**

1. **ஆம் அத்தியாயம் : அறிமுகம்** **3**

1.1. நிறுவனமும் தொழிற்பாடுகளும் 4
1.2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழப் பணிகள் 5
1.3. நிர்வாகப் பணிகள் 5

2. **ஆம் அத்தியாயம் : இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு** **8**

2.1. தேயிலை சிறு பற்றுநிலங்கள் 9
2.2. தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்பு 9
2.3. தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள் 9
2.4. தேயிலை சிறு பற்றுநிலங்களின் எண்ணிக்கை 9
2.5 நில வகைப்படுத்தல் 10
2.6 தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி 11
2.7 தேயிலை சிறு பற்றுநில உற்பத்தித் தொகுப்பு 14
2.8. தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தித்திறன் 15
2.9. முதலீடுகள் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு 16

3. **ஆம் அத்தியாயம் : நியதிச்சட்ட நோக்கங்களும் சாதகப் பெறுபேறுசார் அபிவிருத்திப் பணிகளும்** **18**

3.1. மத்தியகால சாதகப் பெறுபேறுசார் அபிவிருத்தி இலக்குகள் / பணிகள் 20
3.2. தேயிலை சிறு பற்றுநிலங்களின் முதலீட்டு மேம்பாடு தொடர்பான விசேட செயற்திட்டப் பணிகள் 37
3.3. பிரதான சாதகப் பயன்விளைவுச் சுட்டிகள் 40

4. **ஆம் அத்தியாயம்: தேயிலை சிறு பற்றுநில பிரிவின் பயிரிடல் கிரயம் மற்றும் கொழுந்து விலை** **41**

4.1. தொழிலாளர் கிரயம் 42
4.2. ஒரு கிலோ பச்சைக் கொழுந்துத் தேயிலையின் உற்பத்திக் கிரயம் 42
4.3. உற்பத்தி வரம்பெல்லை மற்றும் விலை 43
4.4. தேயிலை மீள்பயிரிடல் கிரயம் 43
4.5. ஊக்குவிப்புக் கொடுப்பனவு வீதமும் பயிரிடல் கிரயமும் (ஒரு ஹெக்ரயாருக்கு) 44
நடப்பாண்டின் கணக்குக் கூற்றுக்கள் மற்றும் ஐந்தொகை
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

# அட்டவணை


| இல. | | |
|---|---|---|
| 1 | நிறுவகத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதி | 45 |
| 2 | நிறுவகத்தில் பணிபுரியும் பணியாட்தொகுதி - 2017 | 47 |
| 3 | நிறைவேற்றுத்தர அலுவலர்களின் கல்வித் தகைமைகளுக்கேற்ற வகுப்பீடு | 49 |
| 4 | தேயிலை சிறு பற்றுநில பிரிவின் தேயிலை உற்பத்தி | 50 |
| 5 | தேயிலை மீள் பயிரிடல் உதவித் திட்ட செயற்பாடு | 51 |
| 6 | பயிர் புனர்ஜீவனம் (இடை நடுகை) உதவித் திட்ட செயற்பாடு | 52 |
| 7 | புதிதாக தேயிலை பயிரிடல் உதவித் திட்ட செயற்பாடு | 53 |
| 8 | 8-A தாய் செடிகளின் மூலம் புதுவகை காம்புகள், கிளைகள் விநியோகம் | 54 |
| | 8-B நிறுவக ரீதியான தேயிலை நாற்றுமேடைகளின் செயற்பாடு | 55 |
| | 8-$C_1$ வணிக ரீதியான நாற்றுமேடைகளின் செயற்பாடு - 2016/2017 | 56 |
| | 8-$C_2$ வணிக ரீதியான நாற்றுமேடைகளின் செயற்பாடு - 2017/2018 | 57 |
| 9 | 9-A அமைவிடத்திற்கேற்ப கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் தேயிலை விலை | 58 |
| | 9-B பச்சைக் கொழுந்து ஒரு கிலோவிற்கான உற்பத்திக் கிரய மதிப்பீடு | 59 |
| 10 | 10-A பயிரிடல் கிரய மதிப்பீடு – மேட்டுநிலம் / மத்திய நிலம் தேயிலை மீள் பயிரிடல் ஒரு ஹெக்ரயாருக்கு | 60 |
| | 10-B பயிரிடல் கிரய மதிப்பீடு – தாழ்நிலம் தேயிலை மீள் பயிரிடல் ஒரு ஹெக்ரயாருக்கு | 61 |
| 11 | தேயிலை ஏற்றுமதி மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டல் | 62 |
| 12 | STaRR செயற்திட்டத்தின் மேம்பாடு | 63 |

# உருப்படங்கள்

உருப்பட இலக்கம்


1 சாதாரண உற்பத்தித்திறனின் வருடாந்த வளர்ச்சி 7

2 மொத்தத் தேயிலை நிலங்கள் குறித்த சிறு பற்றுநிலங்களின் பங்களிப்பு 9

3 நிலப்பரப்புக்கு அமைய தேயிலை சிறு பற்றுநிலங்களின் விஸ்தரிப்பு 11

4 முகாமைத்துவ நிறுவனங்களுக்கமைய தேசிய தேயிலை உற்பத்தி - 2017 12

5 தேயிலை சிறு பற்றுநில பிரிவின் மாதாந்த தேயிலை உற்பத்தி 13

6 தேயிலை சிறு பற்றுநில பிரிவின் மாதாந்த தேயிலை உற்பத்தி வளர்ச்சி 13

7 7-A தேயிலை மீள் பயிரிடல் மானியம் அதிகரிப்பு 21

7-B தேயிலை மீள் பயிரிடல் மானிய தொகையை அதிகரிப்பதற்கு நிகராக களை பிடுங்குதல் மற்றும் தேயிலை பயிரிடல் வளர்ச்சி 21

8 மீள் பயிரிடல் உதவி தொடர்பாக ஆண்டுதோறும் விண்ணப்பித்தல் 22

9 தேயிலை புதிதாக பயிரிடல் உதவிக் கொடுப்பனவின் வருடாந்த மேம்பாடு 24

10 தேயிலை புதிதாக பயிரிடல் மானியம் அதிகரித்தல் 25

11 தேயிலை புதிதாக பயிரிடல் உதவிக் கொடுப்பனவின் வருடாந்த மேம்பாடு 27

12 பயிர் புனர்ஜீவன உதவித் திட்ட கொடுப்பனவுகளின் மேம்பாடு 29

13 பிராந்திய ரீதியான சங்கங்களின் விஸ்தரிப்பு 34

14 உற்பத்தி வரம்பெல்லை 42

## நிர்வாக கட்டமைப்பு – தலைமை அலுவலகம் மற்றும் ஹந்தான பயிற்சி நிலையம்




(1) சிரேஷ்ட முகாமையாளர்
HM 2-1
(2) சிரேஷ்ட முகாமையாளர்
HM 1-1
(13) மத்திய முகாமையாளர்
MM 1-1
4) கனிஷ்ட முகாமையாளர்
JM 1-1
(1) முகாமைத்துவ உதவியாளர் ( தொழி.
(32) முகாமைத்துவ உதவியாளர்
( தொழிநுட்பம் சாராத)
த. அலுவலகம் - 30, ஹந்தானை- 2
(9) ஆரம்ப மட்டம் - சாரதி
(2) ஆரம்ப மட்டம் சமையற்காரர்/ உதவியாளர்
(8) ஆரம்ப மட்டம் அலுஜவலக உதவியாளர் / தொழிலாளி
79

நிர்வாக கட்டமைப்பு
முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் - MSD / 30 இற்கமைய

# நிர்வாக கட்டமைப்பு – பிராந்திய அலுவலகம்




(23) மத்திய முகாமையாளர்
MM 1-1

(40) கனிஷ்ட முகாமையாளர்
JM 1-1

(152) முகாமைத்துவ உதவியாளர் (தொழி.)
MA 2-2

(102) முகாமைத்துவ உதவியாளர் (தெரிநுட்பம் சாராத)

(17) ஆரம்ப மட்டம் - சார
அலுவலக உதவியாளர் / தொழிலாளி

380

நிர்வாக கட்டமைப்பு
முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் - MSD / 30 இற்கமைய

# பணிப்பாளர் சபை

1. தலைவர் - தேசபந்து விஜேரத்ன தெவகெதர அவர்கள்

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| பெயர் | பதவி | நிறுவனம் | தொ.இல. |
|---|---|---|---|
| 1. திரு. பீ.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி (2017-07-11 வரை) | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 011-2186160 |
| 2. திரு. ஈ.ஏ.ஜே.கே. எதிரிசிங்க (2017-07-11 இருந்து) | பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 011-2186204 |
| 3. திரு. ஈ.ஏ.ஜே.கே. எதிரிசிங்க | தேயிலை ஆணையாளர் | இலங்கை தேயிலை சபை | 011-2580182 |
| 4. திரு.ரீ.வீ. வீரசேன | மேலதிக பணிப்பாளர் நாயகம் | இலங்கை முயற்சியாண்மை திணைக்களம் | 011-2484671 |
| 5. வைத்தியர். எம்.எம்.ஜே.பீ. கவரகம்மான | தலைவர் | தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் | 052-2258201 |
| 6. பேராசிரியர் ஐ.எஸ்.பீ. அபேசிங்க | பணிப்பாளர் | தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் | 052-2258201 |
| 8. திரு. கே.எல். குணரத்ன | கௌரவ செயலாளர் | அகில இலங்கை சம்மேளனம் | 077-7707623 |
| 9. திரு. நெவில் ரத்நாயக்க | கௌரவ தலைவர் | அகில இலங்கை சம்மேளனம் | 011-7909020 |
| 10. திரு. ரொசான் ராஜதுரை | முகாமைத்துவ பணிப்பாளர் | களனிவெலி பெருந்தோட்டக் கம்பனி | 011-2627700 |
| 11. திரு. டபிள்யூ.ரீ.கே. சமரதுங்க | தொழிற்சங்க பிரதிநிதி | - | 071-4634132 |
| 12. திரு. நுவன் விஜேசிங்க | கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் பிரதிநிதி | - | 0777154816 |
| 13. திருமதி. கல்யாணி சதரசிங்க | தொழிற்சங்க பிரதிநிதி | - | 071-2934559 |

| | | | |
|---|---|---|---|
| 14. திரு. அமர திசாநாயக்க | தனியார் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்க பிரதிநிதி | - | 071-4175592 |
| 15. திரு. சீ. அபேகுணவரத்தன | கண்காணிப்பாளர்/ உறுப்பினர் | - | 077-8633802 |
| 16. திரு. ஆர்.எஸ். ஜயரத்ன | கண்காணிப்பாளர்/ உறுப்பினர் | - | 071-9281182 |
| 17. திரு. ரோஹான் பி. பெதியாகொட | கண்காணிப்பாளர்/ உறுப்பினர் | - | 011-2590968 |
| 18. திரு. ஏ.ஏ. தர்மபந்து | கண்காணிப்பாளர்/ உறுப்பினர் | - | 077-7274574 |

2017 ஆண்டில் 13 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## *கணக்காய்வு குழு*

| பெயர் | | நிறுவனம் | தொ.இல. |
|---|---|---|---|
| 1. தலைவர் - ரீ.வீ. வீரசேன | மேலதிக பணிப்பாளர் நாயகம் | இலங்கை முயற்சியாண்மை திணைக்களம் | 011-2484671 |
| 2. உறுப்பினர் - திரு. எம்.ஜே.எஸ். ரவிசிங்க | பணிப்பாளர் (அபிவிருத்தி) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 011-2186204 |
| 3. உறுப்பினர் - திரு. கே.எல். குணரத்ன | கௌரவ செயலாளர் | அகில இலங்கை சம்மேளனம் | 077-7707623 |
| 4. உறுப்பினர் திருமதி. கல்யாணி சதரசிங்க | தொழிற்சங்க பிரதிநிதி | - | 071-2934559 |
| 5. உறுப்பினர் திருமதி. எஸ்.டீ கட்டுவாவலகே | | கணக்காய்வாளர் அத்தியட்சகர் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் (இலங்கை தேயிலை சபை) | 011-2583687 |

2017 ஆண்டில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**நிறைவேற்றுத்தர பணியாட்தொகுதி மற்றும் நிர்வாக மாவட்ட அலுவலகங்கள்**

**தலைமை அலுவலகம்**
**இலக்கம் 70, பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை.**
**தொலைபேசி : 011-7909020/21**

**நிறைவேற்றுத்தர பணியாட்தொகுதி – தலைமை அலுவலகம்**

தலைவர் : தேசபந்து விஜேரத்ன தெவகெதர அவர்கள்
பொது முகாமையாளர் : திரு. சீ.பே.ஐ.ரீ பர்னாந்து (2016.06.02 இருந்து 2017.07.12 வரை)
திரு. டீ.ஜீ. மஹிபால (2017.07.13 இருந்து)
முகாமைத்துவ ஆலோசகர் (ஒப்பந்த) :திரு. ஏ.என்.மடவல

**விஸ்தரிப்புப் பிரிவு**

பிரதிப் பொதுமுகாமையாளர் (விஸ்தரிப்பு) : திரு. சீ.பே.ஐ.ரீ பர்னாந்து

**அபிவிருத்திப் பிரிவு**

பிரதிப் பொதுமுகாமையாளர் (அபிவிருத்தி) } : திரு. ஜே.எம்.ஜி. ஜயசிங்க
பணிப்பாளர் சபை செயலாளர்
முகாமையாளர் (அபிவிருத்தி) பதில் : திரு. ஆர்.ஏ. வைத்தியரத்ன
உதவி முகாமையாளர் (அபிவிருத்தி) : திரு. ஏ.ஏ.டீ.பி. அபேதிலக்க
உதவி பிராந்திய முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) : திருமதி. டீ.கே.பீ.ஏ, பிரியதர்சனி

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு**

முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) : திருமதி எம்.ஐ.எம்.ஜே. சமரவிக்ரம (2017.11.04வரை)
உதவி முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) : திரு. ஆர்.ஏ. வைத்தியரத்ன

**நிதிப் பிரிவு**

முகாமையாளர் (நிதி) : திருமதி டீ.ஜீ.பி. ஜயந்தி
உதவி முகாமையாளர் (நிதி)) } : திரு. பீ.ஆர். இந்திக பெரேரா
: திருமதி. ஆர்.ஏ.சீ.டீ.டீ. ஜயதுங்க

மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவு

முகாமையாளர் (மனிதவள, நிர்வாக) பதில். : திரு. ஹர்சான் த சில்வா
உதவிப் பொதுமுகாமையாளர் (சேவை) : திரு. அமித பஸ்குவல் )
உதவி முகாமையாளர் (மனிதவள, நிர்வாகம்) : திரு. ஹர்சான் த சில்வா
உதவி முகாமையாளர் (மனிதவள, நிர்வாகம்) : திரு. துர பர்னாந்து (2017.10.25 வரை )
நிர்வாக அலுவலர் : திரு. சரத்சந்திர முரமுதலிகே

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

உள்ளகக் கணக்காய்வாளர் : திரு. கே.ஜீ. நாரத
உள்ளகக் கணக்காய்வு அலுவலர் (பதில்)) : செல்வி. பீ.ஜீ.ஐ. சுரங்கிகா

**காலி பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : காலி**
**இலக்கம் 81,வெளிச்சவீட்டு வீதி, கோட்டை, காலி**
**தொலைபேசி :- 091-7201126/28**
**தொலைநகல்:- 091- 2244382 / மின்னஞ்சல்- tshdaga@gmail.com**

பிராந்திய முகாமையாளர் (பதில்) : திரு. ஈ.ஆர்.எஸ். குணவர்த்தன
உதவி பிராந்திய முகாமையாளர் (விஸ்தரிப்பு) : திரு..யூ.எச். மொஹொட்டி
உதவி பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல், அபிவிருத்தி): திரு. டீ.எல்.சி. சூரியாரச்சி
(கடமை உள்ளடக்கம்)
பொறுப்பான அலுவலர் : திரு. டீ.எல்.சி. சூரியாரச்சி
: திரு. டி.எம்.எஸ். பிரியதர்சக
: திரு. எம்.டி. அமரருவன்
பொறுப்பான அலுவலர் (பதில்) : திரு. எச்.எம்.கே.பி.பீ. ஹேரத்
பொறுப்பான அலுவலர் (பதில்) : திரு. கே.எஸ்.எஸ். தஹநாயக்க
நிர்வாக அலுவலர் : திரு. எச்.எம்.ஆர்.பீ. ஜே. ஹேரத்
கணக்கு அலுவலர் : திருமதி. யு.எல்.எம். பெரேரா

**மாத்தறை பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : மாத்தறை, ஹம்பாந்தோட்டை**

**இல. 31, காளிதாஸ் வீதி, மாத்தறை**
**தொலைபேசி இல.:- 041-7200799 - 041-7200394/96**
**தொலைநகல்:- 041- 2226487 / மின்னஞ்சல் - tshdamt@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் | : திரு. ஜி.ஜி. பந்துல |
| உதவி பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல், அபிவிருத்தி) | : திரு. சாலிய நாரகஸ்பிட்டிய |
| பொறுப்பான அலுவலர் | : திரு. ஈ.ஜீ.டீ. சாந்தசிரி |
| | : திரு. ஜே.எல். எதிரிசூரிய |
| பொறுப்பான அலுவலர் (பதில்) | : திரு. சுனில் சரத் தேசப்பிரிய |
| பொறுப்பான அலுவலர் (பதில்) | : திரு. மஹிந்த பட்டகொட |
| நிர்வாக அலுவலர் | : திருமதி என்.வீ.பீ. புஷ்பகுமாரி |
| கணக்கு அலுவலர் | : திருமதி. எச்.எம்.எல். புஷ்பகுமார |

**இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : இரத்தினபுரி**
**இல. 1/28, புதிய நகரம், இரத்தினபுரி**
**தொலைபேசி இல.:- :- 045-7201243 - 045-7201904**
**தொலைநகல்:- 045- 2228647 / மின்னஞ்சல் - tshdarat@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் | : திரு. கே.ஏ.பீ. பத்மராஜா |
| உதவி பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல், அபிவிருத்தி) | : திரு. எச்.கே. லலித் குமார |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) (பதில்) | : திரு. டி.எம்.ஜி.எஸ். ஏக்கநாயக்க |
| | : திரு. ஜீ.எ.கே. பாலசந்திர |
| | : திரு. ஏ.கே. விஜேசேக்கர |
| | : திரு. பீ.எஸ்.கே. பெரேரா |
| | : திரு. எம்.டீ.ஏ. புஷ்பகுமாரி |
| கணக்கு அலுவலர் | : திருமதி. எம்.ஏ. பியசீலி |

**கண்டி பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : கண்டி, மாத்தளை, குருணாகலை**
**இல. 2/7/1,கன்னொருவ வீதி, பேராதனை, கண்டி**
**தொலைபேசி இல.:- :- 081-7200827 - 081-7200821**
**தொலைநகல்:- 081- 2389011 / மின்னஞ்சல் - tshdakan@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் (பதில்) | : திரு. டப்.எச்.பீ.எஸ். விஜேதுங்க |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) | : திரு.எம்.ஆர்.என். தம்மிக்க |
| உதவி பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல், அபிவிருத்தி)(க.உ.) | திரு. டீ.எம்.ஆர்.கே.பீ. தசநாயக்க |
| பொறுப்பான அலுவலர் | : திரு. டீ.எம்.டப். பண்டா |
| | : திரு. டீ.எம்.ஆர்.கே.பீ. தசநாயக்க |
| | : திரு. டப். ஜே.டப். அரம்பேபொல |
| | : திரு. ரி. அமரசேக்கர |
| | : திரு. கே.எம்.டீ.ஏ. குருப்பு |
| பொறுப்பான அலுவலர்(பதில்) | : திரு. யூ.ஜே.பீ. விஜேதுங்க |
| நிர்வாக அலுவலர் | : திரு. சமில பண்டார தித்தெனிய |
| கணக்கு அலுவலர் (க.உ.) | : திரு. தமிந்த பிரியஞ்சித் |
| மக்கள் தொடர்பாடல் அலுவலர் | : திரு. அநுர திசாநாயக்க |

**நுவரெலியா பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : நுவரெலியா**
**புதிய நகரம், கொத்மலை**
**தொலைபேசி :-052-4930265/ 052-4930247**
**தொலைநகல்:- 052-2259060 / மின்னஞ்சல் - tshdane@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் | : திரு.டப்.டீ.ஆர்.பி. விமலரத்ன |
| உதவி பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல், அபிவிருத்தி) | : திரு. ஜீ.ஏ.என். புஷ்பகுமார |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) (க.உ.) | : திரு. டீ.வி.கே. நந்தசிறி |
| பொறுப்பான அலுவலர் | : திரு. ஏ.எம்.டீ.எஸ். ரணவீர |

| | |
|---|---|
| பொறுப்பான அலுவலா் (பதவி) | : திரு. எம்.ஏ.ஜ. அபேசேன |
| | : திரு. ஏ.ரி.ஏ. குணவர்த்தன |
| நிர்வாக அலுவலா் | : செல்வி எம்.யூ.எஸ். விக்ரமசிங்க |
| கணக்கு அலுவலா் | : திருமதி. சியாமலீ பிரேமசுந்தர |

**ஊவா பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : பதுளை, மொனராகலை**
**புதிய பதுளை வீதி, பண்டாரவளை**
**தொலைபேசி:- 057-72000241/ 057-7200081**
**தொலைநகல்:- 057- 2232237 / மின்னஞ்சல் - uvatshda@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் | : திரு. எச்.ஆர். அருணசாந்த |
| உதவி பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல், அபிவிருத்தி) | : திரு. கே.எம்.ஆர்.எல். பண்டார |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) (பதில்) | : திரு. எச்.எம். பிரேமகுமார |
| பொறுப்பான அலுவலா் | : திரு. எம்.எம். குமாரசிறி |
| | : திரு. ஆர்.எம்.ஏ.டீ. ரத்நாயக்க |
| பொறுப்பான அலுவலா்(க.உ.) | : திரு. கே.என். குமாரசிறி |
| நிர்வாக அலுவலா் (பதில்) | : திரு. குணசிறி அதிகாரி |
| கணக்கு அலுவலா் | : திரு. மதுஷங்க நாவலகே |

**கேகாலை, பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் :கேகாலை, கம்பஹா**
**விவசாய கட்டிடம், கச்சேரி வீதி, கேகாலை**
**தொலைபேசி :- :- 035- 7201254/ 035-7201243**
**தொலைநகல் :- 035- 2230163 / மின்னஞ்சல் - tshdake@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் | : திரு. ஆர்.ஏ.ஜீ.பீ. ரணசிங்க |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) (க.உ.) | : திரு. ஜீ.என். யகமுனி |
| பொறுப்பான அலுவலா் | : திரு. ஆர்.எம்.பீ.ஆர். பண்டார |
| பொறுப்பான அலுவலா் (பதில்) | : திரு. பீ.ஜீ.பீ.சீ. விஜேசிங்க |
| நிர்வாக அலுவலா் | : திரு. ஈ.எம்.டீ. அமுனுகம |
| கணக்கு அலுவலா் | : திரு. ஆர்.ஆர்.எம்.ஜே.பீ. ரத்நாயக்க |

**களுத்துறை, பிராந்திய அலுவலகம் - நிர்வாக மாவட்டம் : களுத்துறை, கொழும்பு**
**தடுகொடயாவத்தை வீதி, இந்தகொட, மத்துகம**
**தொலைபேசி :- 034- 7200183/ 034-7201630**
**தொலைநகல் :- 034- 2249690 / மின்னஞ்சல் -tshdakalu@gmail.com**

| | |
|---|---|
| பிராந்திய முகாமையாளர் (பதில்) | : திரு. டி.எம்.ஜே. நாகந்தல |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) | : திரு. டி.எம்.ஜே. நாகந்தல |
| உதவி பிராந்திய முகாமையாளர்(விஸ்தரிப்பு) (பதில்) | : திரு. எஸ்.ச. முதன்நாயக்க |
| பொறுப்பான அலுவலா் | : திரு. ரி.எம்.எஸ்.எல். பிரியதர்ஷக்க |
| பொறுப்பான அலுவலா் | : திருமதி. எச்.பீ. புஷ்பகுமாமரி |
| நிர்வாக அலுவலர் | : திரு. எச்.பீ.எல்.எஸ். புஷ்பகுமார |

**ரத்னசிறி விக்கிரமநாயக்க தேசிய பயிற்சி நிலையம்**
**5ஆம் கம்பம், மத்திய பகுதி, உடவெல, ஹந்தான**
**தொலைபேசி இல.:- :-081-7201760/081-7201873**
**தொலைநகல் :-081-3800679/ மின்னஞ்சல் - tshdakalu@gmail.com**

| | |
|---|---|
| முகாமையாளர் (பயிற்சி) (பதில்) | : திரு. டப்.ரி.ஆர்.பீ. விமலரத்ன |
| உதவி முகாமையாளர் (பயிற்சி) (பதில்) | : திரு. அனுருத்த பண்டார |
| பயிற்றுவிப்பு அலுவலர் (க.உ.) | : திரு. சமில பண்டார தித்தெனிய |

## *பொழிப்பு*

### தேயிலை சிறு பற்றுநிலங்கள் விஸ்தரிப்பு

2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்களின் புள்ளிவிபரத் தரவுகளுக்கேற்ப கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் தவிர, மதிப்பிடப்பட்ட மொத்த தேயிலை நிலங்களின் பரப்பளவு 125,019 ஹெக்ரயார்கள் (50 பேர்ச்சஸ்களுக்குக் குறைந்த காணிகள் அடங்கலாக) ஆகும். 2012 ஆம் ஆண்டிலிருந்து சட்ட ஏற்பாடுகளின் படி, சேவை வழங்கப்பட்டன. 10 ஏக்கரை விடக் குறைந்த தேயிலை பற்றுநிலங்கள் தொடர்பாக மாத்திரம் அவற்றின் அபிவிருத்திக்கும் அதற்குரியதுமான துணைச் சேவைகள் வழங்கப்படும். 2005 ஆண்டிற்குப் பின்னர் தேயிலை சிறுபற்றுநிலங்கள் தொடர்பான தொகைமதிப்பு மீண்டும் மேற் கொள்ளப்படவில்லை. 2016 ஆண்டிறுதியில் இலங்கை தேயிலைச் சபையுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட தேயிலை சிறுபற்று நிலங்களளைப் பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய தேயிலை சிறு பற்று நிலங்கள் தொடர்பான பௌதீக தகவல்கள் மீள இற்றைவரைப்படுத்தப்பட உள்ளன.

2017 ஆண்டில் 1994 விவசாயிகள் புதிதாக தேயிலை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன், மானிய உதவியின்றி 202 ஹெக்ரயார் நிலப் பரப்புகளில் புதிதாக தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. அதாவது 53.7 ஹெக்ரயார மற்றும் 363 விவசாயிகள் கேகாலை மாவட்டத்தில் காணப்பட்டனர். 2017 ஆண்டின் இறுதியில் தேயிலை பயிரிடல் தொடர்பாக மதிப்பிடப்பட்ட முழுமொத்த தேயிலை சிறு பற்றுநில நிலப்பரப்புக்கள் 122169 ஹெக்ரயர்கள் ஆகும்.

### தேயிலை சிறுபற்றுநில பிரிவின் உற்பத்தியும் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பும்

2017 ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தியானது 307.72 கிலோ மில்லியன் ஆக இருந்ததுடன், தேயிலை சிறு பற்றுநில பிரிவின் உற்பத்த 232.417 கிலோ மில்லியன் ஆகும். அதாவது மொத்த தேயிலை உற்பத்தியில் 75.5% தேயிலை சிறு பற்றுநில பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்டதாகும். தேயிலை சிறு பற்றுநில பிரிவில் இதுவரையில் அறிக்கையிட ப்பட்ட ஆகக்கூடிய உற்பத்தி 247.4 கிலோ மில்லியன் 2014 ஆண்டிலும், தேசிய தேயிலை உற்பத்தியில் ஆகக்கூடிய 340.22 கிலோ மில்லியன் 2013 ஆண்டிலும் அறிக்கையிடப பட்டுள்ளன. 2016 ஆண்டுக்கு நிகராக தேசிய தேயிலை உற்பத்தியானது 5% இனால் அதிகரித்ததுடன், தேயிலை சிறு பற்று நிலங்கள் பிரிவின் உறபத்தி 6.6 இனால் அதிகரித்து உள்ளது. தேயிலை சிறு பற்றுநில பிரிவின் ஆகக்கூடிய உற்பத்தி அறிக்கையிடப் பட்ட 2014 ஆண்டுக்கு நிகராக 6% வீதமளவில் குறைவடைந்துள்ளது, எனினும், தேயிலை சிறு பற்றுநில பிரிவின் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு படிப்படியாக அதிகரித்து 2017 ஆண்டளவில் 75.5% வரை அதிகரித்துக் காணப்பட்டது.

### தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தித்திறன்

2017 ஆம் ஆண்டில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் சாதாரணமாக உற்பத்தித்திறன் முன்னைய ஆண்டுக்கு நிகராக 6.6% இனால் அதிகரித்திருந்தது. அதற்கமைய 2017 ஆண்டில் சாதாரண உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு முடிவுப் பொருளான தேயிலை 1995 கி.கி. ஆகும். தாழ்நிலம் தொடர்பாக சாதாரண உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு முடிவுப் பொருளான தேயிலை 2132 கி.கி. ஆகும். 3% வீதத்தாலும் குறைவடைநது இருந்தன. மத்திய மலைநாடு தொடர்பாக முடிவுப் பொருளான தேயிலை 1346 கி.கி. ஆக இருந்ததுடன், ஊவா தொடர்பாக முடிவுப் பொருளான தேயிலை 1453 கி.கி. ஆகும். உயர் நிலங்கள் தொடர்பான சாதாரண உற்பத்தித் திறன் முடிவுப் பொருளான தேயிலை 2213 கி.கி. ஆகும்

### தேயிலை மீள் பயிரிடல் நிலப்பரப்பும் தேயிலை மீள் பயிரிடல் விகிதமும்

தேசிய கொள்கைக்கு இணங்க, ஆகக் கூடிய அறுவடையைப் பெறுகின்ற தேயிலை நிலப் பரப்புக்களை மேலும் பேண வேண்டுமாயின் தற்பொழுது இருக்கின்ற 2% வீத தேயிலை உற்பத்தி நிலப்பரப்புக்களில் வருடாந்தம் தேயிலை மீள் பயிரிடப்படல் வேண்டும். அதற்கமைய தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவினால் தேயிலை மீள பயிரிடப்பட வேண்டிய நிலப்பரப்பின் அளவு 2300 ஹெக்ரயார் ஆகும்.

2012 ஆண்டில் இருந்து காணி அபிவிருத்தி சேவை மற்றும் விஸ்தரிப்பு சேவைகளை வழங்குவதை 10 ஏக்கருக்குக் குறைந்த காணி களுக்கென வரையறுக்கப்பட்டதற்கு அமைய நிலப்பரப்பு 100,000 ஹெக்ரயார்கள் ஆக இருந்தது. ஆகவே, ஓராாண்டுக்கு 2000 ஹெக் நிலப்பரப்பில் மீள்நடுகை நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். வருடாந்த ஒதுக்கீட்டுக்கமைய 2017 இல் 840 ஹெக்ரயார் தேயிலை மற்றும் டிறப்பர் புனர்வாழ்வு செயற் திட்டததின் கீழ் 1655 ஹெக்ரயார் நிலப்பரப்பில் மீள்நடுகைக்காக களை பிடுங்குவது இலக்காக கருதப்பட்டது. செயற்திட்டத்தின் கீழ் 1470 ஹெக்ரயாருக்கு உரிய அனுமதிச் சீட்டுக்கள் வெளியிடப்பட்டன.

கடந்த தசாப்தத்தின் தரவுகளின் படி நிறுவனத்தின் உதவு தொகையுடன் வருடாந்தம் பொதுவாக 1025 ஹெக். நிலப்பரப்பில் தேயிலை மீள் பயிரிடலுக்காக களை பிடுங்கப்பட்டு 834 ஹெக்ரயாரில் சாதாரணமாக வருடாந்தம் தேயிலை மீள் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த 03 ஆண்டுகளில் வருடாந்தம் 1143 ஹெக். களை பிடுங்கப்பட்டு, 762 ஹெக். தேயிலை மீள் பயிரிடப்பட்டுள்ளன.

2107 ஆண்டில் தேயிலை மீள் பயிரிடலின் கீழ் இலக்காக கொள்ளப்பட்ட நிலப்பரப்பு 1040 ஹெக்ரயார் ஆக இருந்ததுடன், மீள் பயிரிட்டு முடிவடைந்த நிலப்பரப்பு 748 ஹெக். ஆகும். இதற்கமைய 2017 ஆண்டில் மீள் பயிரிடப்பட்ட மேம்பாட்டு வீதம் 0.75% ஆகும். அதற்கமைய மீள் பயிரீட்டு வீதம் 0.80% ஆக இருந்தது.

**தேயிலை புதிதாக பயிரிடல்**

2105 ஆண்டில் தேயிலை புதிதாக பயிரிடுவது தொடர்பாக மண் செப்பனிடல் 200 ஹெக். இலக்காக கொள்ளப்பட்டதுடன், அதன் முன்னேற்றம் 211 ஹெக் ஆகும். 202 ஹெக்ரயாரில் தேயிலை புதிதாக பயிரிடப்பட்டிருந்தது. ஆக இருந்ததுடன், நிறுவனம் தொடர்பான வருடாந்த ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு புதிய பயிர் செய்கை வருடாந்தம் இலக்காக கருதப்பட்ட நிலப்பரப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

**பயிர் புனர்ஜீவனம்**

தேயிலை கத்தரித்தல், மண் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல், நிழலாக்கல் போன்ற நடவடிக்கைகளுடன் வெற்றிடங்களில் இடைநடுகை ஆகிய பணிகள் ஒன்றிணைந்தவாறு இதனனூடாக மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய 2017 ஆண்டில் 912500 செடிகள் இடைநடுகை தொடர்பாக இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளதுடன்இ அதில் 564145 செடிகள் இடைநடப்பட்டுள்ளன.

**விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகள்**

தேயிலை சிறு காணிகளின் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல் (அட்டவணை இல. 13-i), கொழுந்தின் தரத்தை விருத்தி செய்தல் (அட்டவணை இல. 14) மற்றும் தேயிலையை அடிப்படையாக கொண்ட பண்ணை முகாமைத்துவம் (அட்டவணை இல. 16 நோக்காக கொண்டு விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்கு 7044 ஆகவிருந்ததுடன், அதில் 6680 அதாவது 95% நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன.

இந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக 179859 விவசாயிகள் இலக்காக கருதப்பட்டதுடன், 188085 விவசாயிகள் கலந்து கொண்டனர். அதாவது அதன் முன்னேற்றம் 05% ஆகும். எனினும், 37200 தனிநபர் விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் 2017 இல் இலக்காகக் கொள்ளப பட்டதுடன், அதன் முன்னேற்றம் 90% ஆகும்.

**தேயிலை சிறு பற்றுநில சங்கங்கள்**

1989 ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கங்கள் சட்டரீதியான ஒரு அமைப்பு முறையாகும். 8 பிரதேச அமைப்புக்களையும், ஒரு அகில இலங்கை அமைப்பையும் கொண்டுள்ள அச் சங்க முறையின் கீழ் 2017 ஆண்டிறுதியில் 1435 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அச் சங்கங்களிலுள்ள முழுமொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 329778 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சங்கங்களின் எண்ணிக்கை 2.3% ஆல் அதிகரித்துள்ளது.

நிறுவனத்தின் **செயற்பாட்டுக் கிரயம்**

2017 ஆண்டளவில் நிறுவகத்தின் அபிவிருத்திக் கிரயம் ரூபா 643.09 மில்லியன் ஆகும். மீண்டுவரும் செலவினம் ரூபா 337.05 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஓப்பிடுகையில் அபிவிருத்திக் கிரயம் ரூபா 81.22 மில்லியன் தொகையினாலும், மீண்டுவரும் செலவினம் ரூபா 22.5 மில்லியன் தொகையினாலும் அதிகரித்துள்ளது. அதற கமைய செயற்பாட்டுக் கிரயத்துக்கும் அபிவிருத்தி கிரயத்துக்கும் இடையிலான விகிசாதாரம் 0.52 ஆக இருந்தது.

**தேயிலைப் பரிசோதகர்கள் / விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் விகிதாசாரத்திற்கேற்ப**

பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்கும் பொருட்டு விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களினதும் விவசாயிகளினதும் விகிதாசாரம் 1:1000 ஆக இருப்பினும், தேயிலை சிறு பற்றுநிலப் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தேயிலை பயிரிடலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் விகிதாசாரம் 1:2751 ஆகவே காணப்படுகின்றது. அதற்கமைய உள்ளடக்கப்பட வேண்டிய விவசாயிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமையால் உத்தியோகத்தா களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். எனினும், நிறுவனத்தின் நிதியேற்பாடுகள் மற்றும் செலவுகள் வரையறுக்கப்பட்டுள்ள மையைக் கவனத்திற் கொண்டு அவ்வாறு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாத போதும், அதற்குப் பதிலாக தேயிலை சிறு பற்றுநில சங்கங்கள் போன்ற சமூக அமைப்புக்களின் துணைச் சேவைகளிடமிருந்து ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பச்சைத் தேயிலைக்கான விலை**

2017 ஆண்டளவில் இலங்கைத் தேயிலைச் சந்தையில் பெற்ற விலைமனுக்களுக்கு அமைய பச்சைத் தேயிலை ஒரு கிலோவுக்கு ஆண்டிறுதியில் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு கிடைத்த பொதுவான பச்சைத் தேயிலை விலை அதாவது மலைநாடு தொடர்பாக 88.71 ரூபாவும், மத்திய மலைநாடு தொடர்பாக 82.75 ரூபாவும், தாழ்நிலப் பகுதிகள் தொடர்பாக 93.29 ரூபாவும் ஆக இருந்ததுடன், ஏனைய அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பொதுவாக 90.69 ரூபா ஆகவும் இருந்தது. 2017 இல் தாழ்நிலப் உற்பத்தி வீச்சு 21.64 ஆக இருந்ததுடன், அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பொதுவான விலையின்படி 19.4 பெறுமானத்தைக் காட்டியது.

# 01. அறிமுகம்

## 1.1. நிறுவனமும் தொழிற்பாடும்

## 1.2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிகள்

## 1.3. நிர்வாக நடவடிக்கைகள்

# அறிமுகம்

## 1.1 நிறுவனமும் தொழிற்பாடும்

தேசிய பொதுச் சபையின் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி சபையின் கீழ், 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டது.

அதன் பிற்பாடு, பிரதான பட்டயத்தில் திருத்தங்களை ஒன்றிணைத்து 1991 இன் 36 ஆம் இலக்க சட்டம், 1997 இன் 21 ஆம் இலக்க சட்டம், 2003 இன் 34 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2006 இன் 42 ஆம் இலக்க சட்டம் ஆகியன சட்டங்களாக்கப்பட்டுள்ளன.

### குறிக்கோள்கள்

தேயிலை சிறு பற்றுநிலங்களை அபிவிருத்தி செய்தல், உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், கொழுந்து விற்பனை நடவடிக்கைகள் மற்றும் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் நலன்களைப் பேணுதல் என்பன இந் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

### அதிகாரசபையின் தொழிற்பாடுகள்

1. தேயிலை சிறு பற்றுநிலங்களினதும் தமக்கென்று சொந்தமான உற்பத்தி வழி வகையற்ற ஏனைய தேயிலை பற்றுநிலங்களினதும் அபிவிருத்திக்கு ஒத்துழைத்தல் அல்லது அபிவிருத்தி செய்வதைப் பொறுப்பேற்றல்.

2. அத்தகைய தேயிலை நிலங்களின் தேயிலை உற்பத்திற்குக் தேவையான பிற வசதிகளையும் இன்னும் தேயிலைத் தொழிற்சாலைகளையும் சுவீகரித்தல், அல்லது அபிவிருத்தி செய்தல்.

3. அத்தகைய தேயிலை நிலங்களில் அல்லது தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளின் சந்தைப்படுத்தப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல் அல்லது விற்பனையை பொறுப்பேற்றல்

4. அத்தகைய தேயிலை நிலங்களையும் தொழிற்சாலைகளையும் அபிவிருத்தி செய் வதற்கு அவசியமான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல் அல்லது அத்தகைய வசதிகளையும் சேவைகளையும் பெற்றுக் கொடுத்தல் இன்றேல் அவற்றை இலகுவாக்குவது தொடர்பாகவும், அந் நிலங்களின் உற்பத்தி, பொதியிடல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு நியதிச் சட்டத்திற்கு அமைவான உரிமைகளையும், பணிக் கொடைகளையும் வழங்குவது உட்பட அவர்களது நலன்களுக்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

5. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அவ்வாறான சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்குதலும், அவ் விடயங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை தயாரிப்பதற்கான விதிமுறைகளை வகுத்தலும்.

6. தேயிலை சிறு பற்றுநிலங்களின் முதலீடுகளை மேம்படுத்தல்

7. தரவுகளைச் சேகரித்தல், விநியோக நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் தேயிலை சிறு பற்றுநிலங்களின் அபிவிருத்தி திறனை ஆராய்தல்

8. உசிதமான கொள்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல் மற்றும் ஏனைய பிற முகவர் நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இல. 02, 03 மற்றும் 04 ஆகியவற்றின் தொழிற்பாடுகளை தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையின் சட்டத்திலிருந்து நீக்குவதற்கும் பிற பணிகளை பதிலீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து இலங்கை தேயிலைச் சபையினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்பட்ட பணிகள் மற்றும் ஏனைய உரியதான கீழே குறிப்பிடப்பட்டுள்ள இன்னபிற பணிகளும் உள்ளடங்குமாறு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1. **தனியார் துறையின் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள காணிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள உதவியளிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

i. தேயிலை மீள் பயிரிடல்

ii. புதிதாக நடுதல்

iii. இடைநடுகை

2. தேயிலை உரம் பகிர்ந்தளித்தல், பெருந்தோட்டப் பொருட்கள், உபகரணங்கள் போக்குவரத்து வதிகளை வழங்குதல் ஆகிய துணைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

3. விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

### 1.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிகள்

2017 ஆண்டு தொடர்பாக நிறுவன கணக்காய்வுத் திட்டம் 2016.12.30 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வு ஆண்டினுள் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

அக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் எட்டப்பட்ட பிரதான தீர்மானங்கள் பின்வருமாறு :

1. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கைகளின் இடையேயான தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத கணக்காய்வு அறிக்கைகளின் மேம்பாடு சம்பந்தமான தீர்மானங்கள்

2. நடைமுறைப்படுத்தப்படாதுள்ள பணிப்பாளர் சபைத் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவது குறித்த தீர்மானங்களை முன்னெடுத்தல்

2018 ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம் 2017.12.27 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயசார் துறைகள் சம்பந்தமான ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. நடப்பாண்டின் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை விசாரணைக்கு உட்படுத்தி அங்கீகரித்தல்

2. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக அறியப்பட்ட விடயங்களை மீளாய்வுக்குட்படுத்தல், பிரேரணைகளை அமுல்படுத்துவதை துரிதப்படுத்தல்.

3. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை மீளாய்வு செய்தலும், அதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறைகள் மீளவும் ஏற்டாதவாறு தடுப்பதற்குத் தேவையான சரிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4. கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விடைகளை சமர்ப்பித்தல் சம்பந்தமான முன்னேற்றத்தை பரிசீலித்தல்.

5. தற்போதுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பது பற்றி விசாரணை செய்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளல் கணக்காய்வு பரிசீலனைகள் மேற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றின் கீழ் தயாரிக்கப்பட்ட 10 கணக்காய்வு விசாரணைகளும் வேறு 04 விசாரணைகளும் 2017 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக நிர்வாகப் பிரிவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் காலக்கிரமத்தில் கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 1.3 நிர்வாகப் பணிகள்

#### 1.3.1 நிறுவகக் கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள்

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் இல. DMS/1714 V-III(C) மற்றும் 2017.10.31 ஆந் திகதிய கடிதம் மூலம் அதிகாரசபையின் நிறுவக கட்டமைப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம் சாராத) 07 பதவிகள் மற்றும் அலுவலக மற்றும் பாதுகாப்பு உதவியாளர் - 07 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அதிகார சபையின் மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை 459 வரை அதிகரித்துள்ளது.

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் இல. DMS/1714 V-II மற்றும் 2016.11.29 ஆந் திகதிய கடிதம் மூலம் தேயிலைப் பரிசோதகர்/ விஸ்தரிப்பு அலுவலர் பதவிகள் தொடர்பாக MA 2-3 ஆக புதிய சம்பளக் குறியீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

#### 1.3.2 கொள்கைத் தீர்மானம்

அரசாங்கத்தின் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் மாவட்ட அபிவிருத்திக்கு முன்னுரிமையளித்து மேற்கொள்ளப்படுவதனால் அதனைத் கடைப்பிடித்தும், நிறுவகத்தினால் வெளி நிறுவகங்களுடன் மேற்கொள்ளப் படுகின்ற இணைப்புச் சேவைகளிடையேயான பணிகளை இலகுபடுத்தும் பொருட்டும், நிறுவகத்தின் முகாமைத்துவ தகவல் முறைமையை மிகச் சிறப்பாக பேணுவதற்குமான விடயங்களை நோக்காகக் கொண்டு - அதிகார சபையின் கண்டி மாவட்டம் மற்றும் நுவரெலிய மாவட்டம் ஆகிய இரு பிரதேச அலுவலகங்களிலும் இதுவரை கலந்து காணப்பட்ட மாவட்டச் சேவை பிரதேச ஆளுகைப் பிரதேச தொகுதியை, ஒரு நிர்வாக மாவட்டத்தில் அனைத்தும் உள்ளடங்கும் வகையிலான மாவட்ட சேவை ஆளுகைப் பிரதேசமாக திருத்தியமைத்து 2016.01.01 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்தப்பட்டதுடன், 2017 ஆண்டில் நுவரெலியா மாவட்டம் தொடர்பாக பிறிதொரு பிராந்திய அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இவ்வாண்டில் வழங்கப்பட்ட நியமனங்கள்**

அதிகாரசபையின் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் அங்கீகாரத்திற்கமைய விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பிற்பாடு, ஆண்டினுள் பின்வரும் பதவிகள் தொடர்பான நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| பதவி | தரம் | எண்ணிக் |
|---|---|---|
| பொதுமுகாமையாளர் | HM 2-1 | 01 |
| உதவிப் பிராந்திய முகாமையாளர்(திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) | MM 1-1 | 03 |
| கணக்கு அலுவலர் | JM 1-1 | 01 |
| நிர்வாக அலுவலர் | JM 1-1 | 03 |
| தேயிலை பரிசோதகர் விஸ்தரிப்பு அலுவலர | MA2-3 | 35 |
| புத்தகம் கட்டுநர் | MA 2-2 | 05 |
| முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 18 |
| சாரதி | PL 3 | 06 |
| **மொத்தம்** | | **72** |

### 1.3.3 நியதிச்சட்ட நோக்கங்களை எய்துவதற்கான முகாமைத்துவ அணுகுமுறை மூலோபாயங்கள்

நிறுவகத்தின் நீண்டகால அடைவு "தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்" என இனங் காணப்பட்டது.

நியதிச்சட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடலின் மூலம் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதுடன், அவ் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ மூலோபாங்களின் கீழ் 2010 ஆண்டு தொட்டு 2017 வரை இனங்காணப்பட்ட மத்தியகால பெறுபேற்றை அடைந்து கொள்ளுமுகமான ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய நிறுவனத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

அது தொடர்பான பிரதான அளவீடாக தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் ஒரு ஹெக்ரயாருக்கான (முடிவுப் பொருளான தேயிலை ஒரு கிலோ) உற்பத்தித்திறன் பிரதான பயன்விளைவுச் சுட்டியாக கருதப்படும். அதற்கமைய மலைநாடு, மத்திய மலைநாடு, தாழ்நில சாதாரண உற்பத்தித்திறன் தொடர்பாக வருடாந்த இலக்கினை வெளிக்கள பதவியணிக்கு அறிமுகப்படுத்துவதன் ஊடாக பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு வெளிக்கள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (2017 ஆண்டில் தேயிலை பயிரிடல் தொடர்பாக இனங்காணப்பட்டுள்ள தேசிய இலக்கு ஒரு ஹெக்ரயாருக்கு முடிவுப் பொருளான தேயிலை 1850 கிலோ ஆகும்). 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் பயன் விளைவினை அளவிடுவது தொடர்பான பிரதான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பயன்விளைவின் வெற்றிகரத்தன்மை என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 01**

**நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தித்திறன் இலக்கு மற்றும் செயலாற்றுகை -2016/2017**

**(ஒரு ஆண்டில் ஒரு ஹெக்ரயாருக்கான முடிவுப் பொருளான தேயிலை கிலோ)**

| | 2016 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | பயன் விளைவு | வீதம் | இலக்கு | பயன் விளைவு | வீதம் |
| தாழ்நிலம் | 2300 | 1984 | 86% | 2300 | 2132 | 93% |
| மத்திய மலைநாடு | 1500 | 1335 | 89% | 1500 | 1346 | 90% |
| ஊவா | 1300 | 1188 | 91% | 1400 | 1453 | 104% |
| பொதுவாக | 1800 | 1872 | 104% | 1850 | 1995 | 108% |

உருப்பட இல. 01




**அபிவிருத்திசார் அடைவுகள்**

நீண்டகால தாக்கங்கள் / அடைவுகள் – தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

**மத்தியகால அடைவுகள்**

1. 03 ஆண்டுகளுள் ஒரு ஆண்டுக்கு/ஒரு ஹெக்ரயாருக்கு/ தயாரிக்கப்பட்ட தேயிலை / கிலோ

    தாழ்நிலம் 2500 வரை

    மத்திய மலைநாடு 1700 வரை

    ஊவா 1500 வரை அதிகரிப்பது

2. மூன்று (3) ஆண்டுகளில் தொழிற்சாலை மட்டத்தில் பச்சைக் கொழுந்தின் தரத்தை 60 % வரை அதிகரிப்பது
3. மூன்று (3) ஆண்டுகளுள் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை 50 % வீதத்தால் வலுப்படுத்தல்
4. ஒரு ஆண்டினுள் சிறப்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நிறுவனத்தை வலுவூட்டுதல்
5. ஐந்து (05) ஆண்டுகளுள் தேயிலை நிலங்களை 10% வீத மேலதிக வருமானமீட்டும் வகையில் ஈடுபடுத்தல்

# 02. இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள

**2.1. தேயிலை சிறு பற்றுநிலங்கள்**

2.2. **தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்புக்கள்**

2.3 தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்கள்

2.4. தேயிலை சிறு பற்றுநிலங்களின் தொகை

2.5. **நில வகைப்படுத்தல்**

2.6. **தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி**

2.7. **தேயிலை சிறு பற்றுநிலங்கள் உற்பத்திக்கூறு**

2.8. **தேயிலை சிறு பற்றுநில துறையின் உற்பத்தித்திறன்**

2.9. **தேயிலை சிறுபற்றுநிலத் துறையின் முதலீடுகள் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

## இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு

### 2.1. தேயிலை சிறு பற்றுநிலங்கள் :

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம், “10 ஏக்கருக்குக் குறைந்த தேயிலைத் தோட்டங்கள் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள்” என கருதப்படுகின்றன. எனினும், இலங்கை தேயிலைச் சபையின் கீழ் உள்ள 10 - 50 ஏக்கர் வரையான தேயிலைத் தோட்டங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் 1978 சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையிடம் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் ஒப்படைக்கப் பட்டது. அதற்கமைய தனியார் உரித்துடைமையின் கீழ் உள்ள 50 ஏக்கருக்குக் குறைந்த அனைத்து தேயிலை நிலங்களினதும் அபிவிருத்தி தொடர்பாக உரிய துணைச் சேவைகள் நிறுவனத்தினால் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

2012 ஆம் ஆண்டளவில் 10 ஏக்கரில் இருந்து 50 ஏக்கர் வரையான தேயிலை நிலங்கள் தொடர்பாக காணி அபிவிருத்தி சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை சபையிடமும், விஸ்தரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. அதற்கமைய 2012 ஆம் ஆண்டில் இருந்து சட்டத்தில் நிலவுகின்ற நிதி ஏற்பாடுகளின் படி, 10 ஏக்கருக்கு குறைந்த தேயிலை நிலங்கள் தொடர்பாக மாத்திரம் அவற்றின் அபிவிருத்தி மற்றும் அது குறித்த துணை சேவைகள் நிறுவத்தினால் வழங்கப் படுகின்றது.

### 2.2 தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்புக்கள்

2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத் தரவுகளுக்கு இணங்க காணப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்புக்கள் 132,329 ஹெக்ரயார்கள் (20 பேர்ச்சஸ் களுக்குக் குறைந்த காணிகள் அடங்கலாக) ஆகும். இலங்கையில் உள்ள மொத்தத் தேயிலை நிலங்களின் நிலப் பரப்புக்கள் ஏறக்குறைய *221,968 ஹெக்ரயார்கள் ஆகும். ஆதலால் இலங்கையில் உள்ள மொத்தத் தேயிலை நிலங்களில் 59% வீதமான தேயிலை நிலங்கள் தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறைக்குச் சொந்தமானவையாகும்.

1994 / 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடும் போது இலங்கையிலுள்ள தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்புக்கள் ஒரு தசாப்த காலத்திற்குள் 82,919 ஹெக்ரயார்களில் இருந்து 116,492 ஹெக்ரயார்கள் (20 பர்ச்சஸ்களுக்கு மேற்பட்ட நிலங்கள் மாத்திரம்) வரை அதாவது ஏறக்குறைய 40மூ வீதத்தினால் அதிகரித்திருந்தது.

**உருப்படம் இல. 02**




மூலம்

- இலங்கைத்தேயிலை நிலங்கள் பற்றிய புள்ளவிபர அறிக்கை 1994/1995 - இலங்கைத் தேயிலை சபை
- தேயிலை சிறு பற்றுநிலங்கள் பற்றிய புள்ளவிபர அறிக்கை 2005 – குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களம்

### 2.3 தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள்

2005 ஆம் ஆண்டளவில் தேயிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் எண்ணிக்கை (20 பேர்ச்சர்ஸ்களுக்குக் குறைந்த தேயிலை நிலப் பயிர்ச் செய்கையார்கள் அடங்கலாக) 370,842 ஆகும். இதில் 82% வீத விவசாயிகள் தனி நில உரிமையாளர்கள் ஆவர். தேயிலை நிலப் பரப்பில் இவர்கள் ஏறக்குறைய 76% நிலங்களைக் கொண்டிருக்கின்றனர். தேயிலை பரிசோதகர் விஸ்தரிப்பு அலுவலர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களின் மதிப்

பீடுகளின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் 395414 தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள் புதிதாக தேயிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## 2.4 தேயிலை சிறு பற்றுநிலங்களின் எண்ணிக்கை:

1994 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேயிலை சிறு பற்றுநிலங்களின் மொத்த எண்ணிக்கை 206,652 முதல் 350,982 (20 பர்ச்சஸ்களுக்கு மேற்பட்ட) வரை அதாவது 70% வீதத்தினால் அதிகரித்து

**அட்டவணை இல. 2**

**மாவட்ட ரீதியில் இலங்கையில் காணப்படும் தேயிலை சிறு பற்றுநில துண்டங்களின் எண்ணிக்கை**

| மாவட்டம் | தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் எண்ணிக்கை | தேயிலை சிறு பற்றுநிலங்களின் எண்ணிக். | ஹெக். எண்ணிக். |
|---|---|---|---|
| கொழும்பு | 478 | 491 | 246 |
| கம்பஹா | 9 | 9 | 2 |
| களுத்துறை | 35,908 | 38,263 | 7,823 |
| கண்டி | 29,224 | 30,747 | 16,058 |
| மாத்தளை | 1,387 | 1,408 | 1,672 |
| நுவரெலியா | 16,875 | 17,547 | 7,205 |
| காலி | 81,491 | 90,524 | 27,427 |
| மாத்தறை | 63,273 | 67,613 | 25,417 |
| ஹம்பாந். | 2,386 | 2,533 | 546 |
| குருனாகலை | 145 | 151 | 180 |
| பதுளை | 28,101 | 29,679 | 9,020 |
| மொனராகலை | 634 | 637 | 199 |
| இரத்தினபுரி | 92,038 | 97,984 | 30,441 |
| கேகாலை | 18,893 | 19,637 | 6,093 |
| **மொத்தம்** | **370,842** | **397,223** | **132,329** |

மூலம்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் பற்றிய புள்ளவிபரம் -2005

இருந்தது. 20 பர்ச்சஸ்களுக்கு அதிகமான காணித் துண்டங்களின் எண்ணிக்கை 370842 ஆகும். 20 பர்ச்சஸ்களுக்கு குறைந்த முழுமொத்த காணித் துண்டங்களின் எண்ணிக்கை 417,607 ஆகும்.

2005 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களின் படி மொத்த தேயிலை சிறு பற்றுநில துண்டங்களின் எண்ணிக்கை 397223 மற்றும் நிலப்பரப்பு ஹெக்ரயார் 132329 ஆகும். விஸ்தரிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 123 பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழ் 3692 கிராம அலுவலர் பிரிவுகளில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவின் தேயிலை நிலங்களின் மேம்பாடு தொடர்பாக விசேடமாக பச்சைக் கொழுந்துக்கான விலை அதிகரித்தல், தேயிலை பயிரிடல் தொடர்பான ஊக்குவிப்புக் கொடுப்பனவகளை அதிகரித்தல், பாரிய நிலங்களைத் துண்டங்களாக்குதல் மற்றும் மாற்றீட்டு பயிர் செய்யப்படாத காணிகளை தேயிலை பயிரிடுவதற்காக பயன்படுத்தல்.

## 2. 5 நில வகைப்படுத்தல் :

2016 ஆண்டில் டிலங்கை தேயிலைச் சபையுடன் இணைந்து மேற்கொள்ளும் தேயிலைக் காணிகளை பதிவு செய்யும் நிகழ்ச்சித்தின் மூலம் தரவுகள் மற்றஜம் தகவல்களை இற்றைவரைப்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதுவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள 2005 ஆண்டின் தொகைமதிப்பு விபரங்களை தாபனத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகபயன்படுத்தப்பட்டன.

தேயிலை சிறு பற்றுநிலங்களின் மொத்த நிலப்பரப்பில் 113,190 ஏக்கர் ( 34.6மூ ) நிலங்கள் ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலங்கள் ஆகும். அதே நேரம் 198,707 (60.8% ) நிலங்கள் இரண்டு ஏக்கருக்குக் குறைந்த நிலங்கள் ஆகும். 10 ஏக்கருக்கு அதிகமானவை 59,731 ( 18.3 % ) ஆகும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கமைய 267253 ஏக்கர் (108200 ஹெக்ரயார்) நிலப்பரப்புக்கள் 10 ஏக்கருக்குக் குறைந்தனவாகும்.

**அட்டவணை இல. 3**

**இலங்கையிலுள்ள தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்பினதும் துண்டங்களினதும் எண்ணிக்கைக்கு அமைய வகைப்படுத்தல் - 2005**

| ஏக்கர் | நிலப் பரப்பு ஏக்கரில் | % | காணித் துண்டங்களின் எண்ணிக்கை | விகிதம் % |
|---|---|---|---|---|
| 1 இற்குக் குறைந்த | 113,190 | 34.6 | 297,342 | 75 |
| 1 - 2 இற்குக் குறைந்த | 85,517 | 26.2 | 74,314 | 18.7 |
| 2 - 3 இற்குக் குறைந்த | 31,882 | 9.8 | 15,101 | 3.8 |
| 3 - 5 இற்குக் குறைந்த | 18,413 | 5.6 | 5,299 | 1.3 |
| 5 - 10 இற்குக் குறைந்த | 18,251 | 5.5 | 2,936 | 0.7 |
| 10 மற்றும் அதிகமான | 59,731 | 18.3 | 2,231 | 0.5 |
| | **326,984** | | **397,223** | |

**உருப்பட இல. 03**




மூலம் : இலங்கை தேயிலை சிறு பற்றுநிலங்கள் தொடர்பான தொகை மதிப்பு அறிக்கை

**2. 6 தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி :**

2017 ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தி 307.72 கிலோ மில்லியன் ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15.15 கிலோ மில்லியன் அல்லது 5.18% வீதத்தால் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

அவ்வாறே தேயிலை சிறு தோட்ட பிரிவின் மொத்த தேயிலை உற்பத்தியும் அதாவது 14.35 கிலோ மில்லியனால் அல்லது 6.6% வீதத்தால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

1991 தேசிய தேயி லை உற்பத்தியில் 50% உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை சிறுபற்றுநில பிரிவு மீளாய்வாண்டில் 75.5% உற்பத்திக்கான பங்களிப்பினை நல்கி வருகின்றது.

**அட்டவணை இலக்கம் 4**

**இலங்கையின் தேசிய தேயிலை உற்பத்தி - 2016 / 2017**

**முகாமைத்துவ நிறுவனங்களுக்கு அமைய பங்களிப்பு**

| | முகாமைத்துவ நிறுவனங்கள் | தேயிலை உற்பத்தி மெ. தொ. 2016 | % | 2017 | % |
|---|---|---|---|---|---|
| 01 | தனியார் துறை (தேயிலை சிறுபற்றுநிலங்கள் துறை) | 218,068 | 74.53 | 232,417 | 75.5 |
| 02 | பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி | 72,948 | 24.95 | 73,079 | 23.8 |
| 03 | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தா. | 1,262 | 0.43 | 1,483 | 0.5 |
| 04 | ஏனையவை | 295 | 0.10 | 741 | 0.2 |
| | **முழு மொத்தம்** | **292,573** | | **307,720** | |

(ஏனையவை = தேயிலை சக்தி, ரீ ஸ்மோல் ஹோல்டர் பெக்ரரி லிமிட்டட், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம், கூட்டுறவுச் சங்கங்கள், எல்கடுவை ப்ளாண்டேசன், களுபோவிட்டியன தேயிலை தொழிற்சாலைக் கம்பனி)

**உருப்படம் இல. 04**




மூலம் : இலங்கைத் தேயிலை சபை

(நிறுவன வகைப்படுத்தலில் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துக் கொழுந்துகளும் தேயிலை சிறு பற்றுநில பிரிவின் உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கு தனியார் துறைப் பிரிவஜ என்பது தேயிலை சிறு பற்றுநில பிரிவாக கருதப்பட்டுள்ளது.)

**உருப்படம் இல. 05**




மூலம் : இலங்கைத் தேயிலை சபை

**உருப்படம் இல. 06**




மூலம் : இலங்கைத் தேயிலை சபை

**2.7 தேயிலை சிறு பற்றுநிலங்கள் உற்பத்தித் தொகுப்பு**

2017 ஆம் அண்டிற்கான தேசிய உற்பத்தியில் தாழ்நாட்டுத் மொத்த தேயிலை உற்பத்தியின் 97% வீதமும், மத்திய மலைநாட்டுத் மொத்தத் தேயிலை உற்பத்தியின் 63 % வீதமும், மலைநாட்டு மொத்தத் தேயிலை உற்பத்தியின் 20 % வீதமும், தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை உற்பத்தியில் உள்ளடங்குகின்றன. (அட்டவணை இலக்கம் 04) மேலும் 2017 ஆம் ஆண்டிலும் தனியார் துறையின் மொத்த தேயிலை உற்பத்தியில் 82% வீதமானவை தாழ்நநாட்டுத் தேயிலை உற்பத்திகளில் உள்ளடங்குகின்றன.

2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆண்டில் தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவின் மலைநாட்டு தேயிலை உற்பத்தி 4% வீதத்தாலும் மத்திய மலைநாட்டு உற்பத்தி 0.8% வீதத்தாலும், தாழ்நில உற்பத்தி 3% வீதத்தாலும் குறைவடைந்துள்ளன.

**அட்டவணை இல. 05**

**தேயிலை சிறு பற்றுநில துறையின் பௌதீக மற்றும் உற்பத்திப் பங்களிப்பு ( அமைவிட அடிப்படையில்)**
**2016/ 2017**

| | | ஆண்டு | மலைநாடு | ம.ம.நாடு | தாழ்நிலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தேயிலை சிறு நிலங்கள் | (ஹெக்ரயார்) | | 5913 | 21403 | 89176 | 116492 |
| பங்களிப்பு சதவீதம் | | | 5% | 18% | 77% | |
| தேசிய உற்பத்தி | மெ.தொ. | 2016 | 64,425 | 44,510 | 183,638 | 292,573 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | % | | 22% | 15% | 63% | |
| | மெ.தொ. | 2017 | 64,643 | 45,655 | 197,422 | 307,72 |
| | % | | 21% | 15% | 64% | |
| **தேயிலை சிறு உற்பத்தி** | மெ.தொ. | 2016 | 12558 | 28573 | 176937 | 218068 |
| | % | | 5.8% | 13.1 % | 81.1% | |
| | மெ.தொ. | 2017 | 13079 | 28811 | 190152 | 232417 |
| | % | | 6% | 12% | 82% | |
| **தேசிய உற்பத்திக்கான** | % | 2016 | 4.3% | 9.8% | 60.4% | 74.5% |
| **பங்களிப்பு** | | 2017 | 4.3% | 9.4% | 61.8% | 75.5% |
| **உற்பத்தித்திறன்** | **ஆண்டுக்கு / ஹெக்ரயாருக்கு/ தயாரிக்கப்பட்ட தேயிலை** | 2016 | 1774 | 1335 | 1984 | 1872 |
| | | 2017 | 2212 | 1346 | 2132 | 1995 |

**மூலம்**

i. தேயிலை சிறு பற்றுநில புள்ளிவிபர அறிக்கை 2005 – குடிசன, புள்ளிவிபரவியல் திணைக்களம்

**ii.** மாதாந்த புள்ளிவிபர சுருக்கக்கூறு - இலங்கை தேயிலை சபை 2015

## 2. 8 தேயிலை சிறு பற்றுநில துறையின் உற்பத்தித்திறன்

2016 மற்றும் 2017 ஆகிய இரு ஆண்டுகளிலும் தேசிய தேயிலை உற்பத்தி அதிகரிப்பு தொடர்பாக தேயிலை சிறுபற்றுநில துறையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் என்பவையே பிரதானமாக செல்வாக்குச் செலுத்தின.

இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை உற்பத்தி தொடர்பான தரவுகளின்படி 2017 ஆண்டில் தேயிலை சிறுபற்றுநில துறையின் சாதாரண உற்பத்தித்திறன் ஆண்டொன்றுக்கு ஒரு ஹெக்ரயாருக்கு, தயாரித்த தேயிலை 1995 கிலோ ஆக காணப்பட்டது. 2016 ஆண்டில் தேயிலை சிறு பற்றுநில துறையின் சாதாரண உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு தயாரித்த தேயிலை 1872 கிலோ கிராம் ஆக இருந்தமையால் உற்பத்தித்திறன் 6.6% வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.

**அட்டவணை இல. 06**

**தேயிலை சிறு பற்றுநில துறையின் உற்பத்தித்திறன் 2017 ( தயாரித்த தேயிலை / கிலோ )**
**நிர்வாக மாவட்டங்களின் அடிப்படையில்**

| நிர்வாக மாவட்டம் | தேயிலை சிறுபற்று நிலப்பரப்பு (ஹெக்) ** | மேட்டு நிலம் | நடுத்தர நிலம் | தாழ்நிலம் | மொத்தம் | உற்பத்தித் திறன் (ஹெக்.01 க்கு தயாரித்த தேயிலை கிலோ) * |
|---|---|---|---|---|---|---|
| பதுளை | 7863 | 4,922,791 | 6,499,185 | - | 11,421,976 | 1453 |
| காலி | 25325 | - | - | 45,120,059 | 45,120,059 | 1782 |
| ஹம்பாந்தோ | 492 | - | - | 186,320 | 186,320 | 379 |
| களுத்துறை | 7588 | - | - | 19,926,368 | 19,926,368 | 2626 |
| கொழும்பு | 246 | - | - | 784,544 | 784,544 | 3189 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கண்டி | 12486 | 437,083 | 15,655,021 | 12,778,091 | 28,870,194 | 2312 |
| கேகாலை | 5753 | 152,366 | - | 8,001,677 | 8,154,043 | 1417 |
| மாத்தளை | 1190 | - | 982,025 | 375,,540 | 1,357,565 | 1141 |
| மாத்தறை | 22971 | - | 249187 | 37011174 | 37,260,361 | 1622 |
| நுவரெலியா | 5971 | 7,566,431 | 4,859,290 | 735,233 | 13,160,954 | 2204 |
| இரத்தினபுரி | 28232 | | 566,390 | 65,608,252 | 66,174,642 | 2344 |
| மொத்தம் | | **13,078,671** | **28,811,098** | **190,151,718** | **232,417,026** | |
| 2005 புள்ளி விபரத்தின் படி நிலப்பரப்பு | - | **5913** | **21403** | **89176** | **116492** | |
| மதிப்பிடப்பட்ட சாதாரண உற்பத்தி ஹெக். | 2016 | 1,774 | 1,335 | 1,984 | 1,872 | - |
| | 2017 | 2,212 | 1,346 | 2,132 | 1,995 | - |

**மூலம் : இலங்கைத் தேயிலை சபை**

* உற்பத்தித்திறன் கணக்கிடும் போது 20 பர்ச்சஸை விட குறைவான நிலங்களை தவிர்த்து கணக்கிடப்பட்டுள்ளன.

** 20 பர்ச்சஸை விட குறைவான நிலப்பரப்புக்களுடன்

* நிர்வாக மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டல்லாது தொழிற்சாலைகளுக்கான கொழுந்து கொள்வனவின் அடிப்படையிலான தரவுகள் பொருத்தமானதாக அமையவில்லை.

## 2. 9 தேயிலை சிறுபற்றுநிலத் துறையின் முதலீடுகள் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2017 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் நிறுவன மூலதனக் கிரயமாக ரூபா 800.01 மில்லியன், மீண்டெழும் செலவினமாக ரூபா 275.00 மில்லியன் அடங்கலாக ரூபா 875.0 மில்லியன் தொகையில் நிறுவக செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. சும்பள அதிகரிப்புக்கான மேலதிக ஒதுக்கீடு ரூபா 345.00 மில்லியன் ஆக ரூபா 1145.00 மில்லியன் தொகையில செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

எனினும், 2017 ஆம் ஆண்டிற்கான மூலதனத் தொகை ஆன ரூபா 455.00 மில்லியன் மற்றும் மீண்டுவரும் ரூபா 329.45 மில்லியன் ஆன முழு மொத்த பெறுவனவுகள் ரூபா 784.45

| ஆண்டு | அபிவிருத்தி கிரயம் ரூ. '000 | செயற்பாட்டுக் கிரயம் ரூ. '000 | அபிவிருத்தி ரூபா தொடர்பாக செயற்பாட்டுக் கிரயம |
|---|---|---|---|
| 2007 | 183782 | 178985 | 0.97 |
| 2008 | 208255 | 188725 | 0.91 |
| 2009 | 185660 | 202146 | 1.08 |
| 2010 | 189194 | 205385 | 1.08 |
| 2011 | 208407 | 218527 | 1.04 |
| 2012 | 276324 | 233738 | 0.85 |
| 2013 | 440060 | 238823 | 0.54 |
| 2014 | 345104 | 252774 | 0.73 |
| 2015 | 561490 | 303435 | 0.54 |
| 2016 | 561868 | 314547 | 0.56 |
| 2017 | 643092 | 337053 | 0.52 |

ஆகும்.

**அட்டவணை இல. 07**

**தனியார் துறையின் தேயிலை உற்பத்தி மற்றும் திறைசேரி நிதிய பெறுவனவுகள் - 2007 – 2017**

| ஆண்டு | மொத்த தேயிலை உற்பத்தி (கி.கி.மி) | முழுமொத்த உற்பத்தி பங்களிப்பு % தனியார் துறை | ஏனைய துறை | தனியார் துறை (தேயிலை சிறு பற்றுநில துறை) க்கான நிதியேற்பாடுகள் (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 2007 | 304.61 | 67.5 | 26.2 | 418.00 |
| 2008 | 318.46 | 67.4 | 25.9 | 405.30 |
| 2009 | 291.13 | 69.3 | 24.8 | 367.80 |
| 2010 | 331.42 | 69.4 | 23.8 | 394.93 |
| 2011 | 327.53 | 69.9 | 30.1 | 391.59 |
| 2012 | 326.27 | 71.4 | 28.6 | 418.83 |
| 2013 | 340.02 | 72.2 | 27.8 | 520.14 |
| 2014 | 338.03 | 73.1 | 26.9 | 742.94 |
| 2015 | 328.96 | 72.9 | 27.1 | 969.72 |
| 2016 | 292.57 | 74.5 | 25.5 | 1009.45 |
| 2017 | 307.72 | 75.5 | 24.5 | 784.45 |

**செயற்பாட்டு மீளாய்வு**

2017 ஆண்டின் செயற்பாட்டுக் கிரயம் ரூபா 337.05 ஆகும். 2016 ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆண்டின் செயற்பாட்டுக் கிரயம் ரூபா 22.11% அதிகரித்துள்ளது.

**அட்டவணை இல. 8**

**செயற்பாட்டு மீளாய்வு**



# 03. நியதிச்சட்ட நோக்கங்களும் பெறுபேறுகளை அடிப்படையாக கொண்ட பணிகளும்

3.1. மத்தியகால பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட இலக்குகள் மற்றும் பயன்விளைவுகள்

**3.2. தேயிலை சிறுபற்றுநிலங்களில் முதலீடுகளை மேம்படுத்தும் விசேட செயற்திட்டப் பணிகள்**

**3.3. பிரதான பயன்விளைவுச் சுட்டி**

**நியதிச்சட்ட நோக்கங்களுக்கான அபிவிருத்திப் பணிகள்**

நிறுவனம் தாபிக்கப்படுவது தொடர்பான சட்டத்திற்கு காரணமான 4 பிரதான நியதிச்சட்ட நோக்கங்களுக்கு பிற்பாடு 1997, 2003, 2006 ஆகிய ஆண்டுகளில் சட்டத்தில் சேர்க்கப்பட்ட திருத்தத்திற்கு ஏற்ப நிறுவனத்தின் நியதிச் சட்ட நோக்கங்களுடன் இணைந்த அபிவிருத்திப் பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதனுள் இல. 02, 03 மற்றும் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை சட்டத்தில் இருந்து அகற்று வதற்கும் வேறு பணிகளை பதிலீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**நியதிச்சட்ட நோக்கங்கள்**

01. தேயிலை சிறு பற்றுநிலங்களினதும், தாமாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ள ஏனைய தேயிலை சிறு பற்றுநிலங்களின் அபிவிருத்திக்கு துணைபுரிதல் அல்லது அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு பொறுப்பெற்றல்.

**அபிவிருத்திப் பணிகள்**

i. தேயிலை மீள் பயிரிடல் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்
ii. தேயிலை புதிதாக பயிரிடல் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்
iii பயிர் புனர்ஜீவன ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்

02. அத் தேயிலை நிலங்களின் உற்பத்திகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு தேவையான தேயிலை தொழிற்சாலைகள் தொடர்பாக பிற வசதிகளை கையேற்றல்
**அபிவிருத்திப் பணிகள்** (-

அதிகார சபையினால் 1977 ஆம் ஆண்டில், “தேயிலை சக்தி நிதியம்” தாபிக்கப்பட்டுள்ளதுடன், 2000 ஆண்டில் இருந்து இது பிறிதொரு நிறுவனமாக மேற்படி நோக்கங்களை எய்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

03. மேற்படி தேயிலை நிலங்களில் அல்லது அத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகளின் விற்பனையை மேம்படுத்தல் அல்லது விற்பனையை பொறுப்பெற்றல்

**அபிவிருத்திப் பணிகள்**

i. தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர் களினால் கொழுந்து வழங்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் பச்சைக் கொழுந்தின் தரத்தை மேம்படுத்தல்.
ii. தேயிலை சிறுபற்றுநில கொழுந்து உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலை தொழிற்சாலை களின் விற்பனை தொடர்பாக தே.சி.ப.அ. சங்கங்களை நெறிப்படுத்தல்.

04. அந் நிலங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பாக தேவைப்படும் வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல் அல்லது விநியோகித்தல் இன்றேல் வசதிகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தல் ஆகியன தொடர்பாக தேயிலைக் காணிகளின் உற்பத்திறனை மேம்படுத்தவதற்கு அல்லது பொதியிடல் வேலையில் ஈடுபடட்டுள்ளவர்களின் நலன்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

**அபிவிருத்திப் பணிகள்**

i. தேயிலை உரம் பகிர்ந்தளித்தல், பெருந்தோட்டப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து சேவை ஆகிய வசதிகளை வழங்குதல் போன்ற துணைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்
ii விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்தல்
iii தேயிலை காணிகளின் உற்பத்தித் திறனை சிறப்பாக மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன்களுக்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் துணைச் சேவைகளை விஸ்தரித்தல் ஆகியனவற்றைக் நோக்கங்களாகக் கொண்டு தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி சட்டதிட்டங்களை விதித்தல்.
iv. தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி சங்கங்களை சமுதாய அடிப்படையிலான சங்கங்களாக வலுப்படுத்துதல் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களை தமது காணிகளை மேலதிக வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடுத்தல்

05. தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல், நிருவகித்தல் மற்றும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அவ்வாறான சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உதவியளித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய காரணிகள் தொடர்பாக சட்ட விதிகளை வகுப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல்

**அபிவிருத்திப் பணிகள்:-**

i. நிறுவகத்தினால் தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல்

ii. தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்திச் சங்கங்களுக்கான சட்டவிதிகளை வகுத்தல்
iii. தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்திச் சங்கங்கங்களினால் அகில இலங்கை அமைப்பை நடாத்திச் செல்வதற்குத் தேவையான நிதியுதவி, சேவை மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை நல்குதல்

IV. தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்திச் சங்கங்கங்களினால் அகில இலங்கை அமைப்பை நடாத்திச் செல்வதற்குத் தேவையான வருடாந்த நிதியேற்பாடுகளை வழங்குதல்

V. தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்திச் சங்கங்கங்கள் தொடர்பாக ஏனைய உதவிகளையும் சேவை ஒத்துழைப்புக்களையும் நல்குதல்

06. தேயிலை சிறுபற்றுநிலங்களில் முதலீடுகளை விருத்தி செய்தல்

**அபிவிருத்திப் பணிகள்:-**

i. நிறுவக ரீதியான மானியங்களுக்கு புறம்பாக விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் (சிறு பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை நிகழ்ச்சித் திட்டம். திவிநெகும மற்றும் சிறு தேயிலை மற்றும் இறப்பர் புனர்ஜீவன நி.தி. போன்றவை)

II. விசேட கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தவது தொடர்பாக வசதிகளை வழங்குதல் (தேயிலை அபிவிருத்தி செயற்திட்டங்கள் நேரடி கடன் நிதி திட்டம், இலங்கை வங்கியின் விசேட உத்தேச கடன் திட்டம்)

III. உரம் - கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

IV. நிறுவகத்தின் தேயிலை நாற்றுமேடைகளைப் பேணல்

V. தாய்ச் செடிகளை பேணல்

VI. வணிக ரீதியான தேயிலை நாற்றுமேடைகளை பதிவு செய்தலும் பயிற்சி மற்றும் அது பற்றிய அறிவையும் பெற்றுக் கொடுத்தல்

VII. காலக்கிரமத்தில் அதிகரித்துச் செல்கின்ற முதலீட்டு கிரயத்தை குறைப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்

VIII. தேசிய கொள்கையான 2% மீள் பயிர்ச்செய்கை விகிதாசாரத்தை உச்சளவில் வைத்துக்கொள்ளும் பொருட்டு தேவையான பணிகளை மேற்கொள்ளல்.

07. தரவுகளைச் திரட்டுதல், பகிர்ந்தளித்தல், பொறுப்பேற்றல் மற்றும் தேயிலை சிறு பற்றுநிலங்களின் அபிவிருத்தி திறன்களை அறிந்துகொள்ளல்

**அபிவிருத்திப் பணிகள்:-**

i. தேயிலை சிறு பற்றுநில பிரிவு தொடர்பான புள்ளிவிபரங்களை மேற்கொள்வதனூடாக தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளல்

II. காலக்கிரமத்தில் மீளாய்வினை மேற்கொள்ளல்

III. தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களை பதிவு செய்தல்

IV. தேயிலை பரிசோதகர் / விஸ்தரிப்பு அலுவலர் வட்டார மட்டத்தில் தரவுகள் மற்றும் குறித்த ஏனைய தகவல்களை திரட்டுதல்

08. பொருத்தமான கொள்கைகள் தொடர்பாக அமைச்சிற்கு ஆலோசனைகளை வழங்கல் மற்றும் ஏனைய குறித்த நிறுவனங்களுடன் தொடர்பாடல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

**அபிவிருத்திப் பணிகள்:-**

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்பு ஒன்றியத்துடனும் மற்றும் நிறுவனங்களுக் கிடையேயும் ஆலோசனைக் குழுவாக செயற்படுதல்

## செயற்பாட்டுத ் திட்டம்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை தொடர்பாக நிறுவனத்தின் குறிக்கோள்களான அபிவிருத்தி பெறுபேறுகளை அடைந்து கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகளுக்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 717.77 மில்லியன் ஆகும்.

செயற்பாட்டுத் திட்டத்தின் அபிவிருத்தி மூலதனக் கிரயத்திலிருந்து 78.65% வீதம் காணிகளின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஒதுக்கிடப்பட்டிருந்ததுடன், விஸ்ரிப்புப் பணிகள் தொடர்பாக 3.14% வீதமும், சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டுவது தொடர்பாக 0.52% வீதமும், நிறுவகப் பணிகளின் வலுப்படுத்தல் தொடர்பாக 3.76 % வீதமும், நுவரெலியா கிராம அபிவிருத்தி விசேட செயற்திட்டம் தொடர்பாக 13.93 % வீதமும், ஆக மதிப்பிடப்பட்டிருந்தன.

தேசிய தேவைப்பாட்டுக்கு அமைய வருடாந்த மீள் பயிரிடல் நடவடிக்கைகளை 2% வீத மட்டத்தில் பேண வேண்டிய தேவைப்பாட்டின் அடிப்படையில் 2017 ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்ட தேயிலை மீள் பயிரிடலின் கீழ் 840 ஹெக்ரயார் பரப்பில் களை பிடுங்குவதற்கும், 852 ஹெக்ரயார் பரப்பில் மண் பாதுகாப்பு-1 தொடர்பாகவும், 1020 ஹெக்ரயார் பரப்பில் மண் பாதுகாப்பு-11 தொடர்பாகவும், 1040 ஹெக்ரயார் பயிரிடல் தொடர்பாகவும், 750 ஹெக்யார் பேணல் தொடர்பாகவும் உள்ளடங்கும் வண்ணம் அபிவிருத்தி மூலதன ஏற்பாடுகளில் இருந்து ரூபா 466.10 மில்லியன் மீள் பயிரிடல் ஊக்குவிப்புக்காக ஒதுக்கப்பட்டது. இதில் ஆண்டிறுதியில் மீள பயிரிடல் உதவியாக செலுத்த வேண்டியிருந்தது.

### 3.1 மத்தியகால பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட இலக்குகள் மற்றும் பயன்விளைவுகள்

**மத்தியகால பெறுபேறுகள் - 01**

03 ஆண்டுகளுள் ஒரு ஆண்டுக்கு / ஹெக்ரயாருக்கு / தயாரிக்கப்பட்ட தேயிலை / கிலோ தாழ்நிலம் 2500 வரையும், மத்திய மலைநாடு 1700 வரையும், ஊவா 1500 வரையும் அதிகரித்தல்

#### 3.1.1 வருடாந்தம் 2% மட்டத்தில் தேயிலை மீள் பயிரிடல் நடவடிக்கைகளைப் பேணல்

தேயிலை சிறு பற்றுநிலங்களில் தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு குறைந்த விளைச்சலையுடைய புராதன தேயிலை விதை நிலங்களில் மீள அங்கீகரிக்கப்பட்ட மொட்டுக்களையுடைய தேயிலையை பயிரிடுவதற்கு அங்கீகாரம் வழங்குவது இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

மீளப் பயிரிடலின் போது ஏற்படுகின்ற அதிக செலவு தொடர்பாக சலுகை வழங்கும் பொருட்டு மீள் பயிரிடலுக்காக வழங்கப்படஜம் நிவாரணத் தொகை 2015 ஆண்டிலிருந்து ஒரஜ ஹெக்ரயாருக்கு ரூபா 500000 வரை அதிகரித்துள்ளது.

2017 ஆண்டு தொடர்பாக நிறுவனத்துக்குக் கிடைக்கப் பெற்ற ஏற்பாடுகளுக்கு அமைய மீளப் பயிரிடலின் போது, களை பிடுங்கும் கட்டம் தொடர்பாக 0.84% அளவு இலக்காக கொள்ள முடிந்ததுடன் அதில் பூரத்தி செய்த வீதம் 0.90% ஆகும். தேயிலை மீளப் பயிரிடல் கட்டம் தொடர்பாக 1.04% வீதம் 2017 ஆண்டில் இலக்காக கருதப்பட்ட போதிலும் மீளப் பயிரிடல் பயன்விளைவு வீதம் 0.75% ஆக இருந்தது.

மேலும் 2010 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பயன்விளைவுசார் முகாமைத்துவ அணுகு முறைக்கு அமைய 2017 ஆண்டிறுதியளவில் தேயிலை சிறு பற்று நிலங்களின் சாதாரண உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு தயாரிக்கப்பட்ட தேயிலை 1850 கிலோ வரை இலக்கு தயார் செய்யப்பட்ட தேயிலை 1995 கிலோ வரை அதிகரித்திருந்தது. எனினும் உச்ச உற்பத்தி அறியக் கிடைத்தது, 2014 ஆண்டின் சாதாரண உற்பத்தித்திறன் பெறுமானம் தயாரிக்கப்பட்ட தேயிலை 2123 கிலோ ஆகும்.

உருப்படம் இல.- 07 A

**தேயிலை மீள் பயிரிரிடலுக்கான மானியத் தொகையை அதிகரித்தல் /ஒரு ஹெக்ரயாருக்கு**




உருப்படம் இல.- - 07 B



**மீன் பயிரிடுவதற்காக விண்ணப்பித்தல்**

மீன் பயிரிடல் தொடர்பாக சுமார் 12530 விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதே 2017 ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்காகும். அதற்க மைய 15567 விவசாயிகள் மீன் பயிரிடல் தொடர்பாக விண்ணப்பித்திருந்தனர். அதில் 12945 விவசாயிகளுக்கு அனுமதிச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன. . தேயிலை மீள்பயிடலுக்கான மானியத் திட்டம் தொடர்பாக விண்ணப்பித்திருந்தமை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆண்டில் 31% வீதத்தால் அதிகரித்திருந்தது

**உருப்படம் இல.- 08**




**பயன்விளைவு**

தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக அனுமதிச் சீட்டுக்களை விநியோகித்தல் 17% வீதத்தாலும், அனுமதிப்பத்திரங்களை உடையோர் பழைய தேயிலையின் களை பிடுங்கல் தொடர்பாக விண்ணப்பித்திருந்த ஹெக்ரயார் பரப்புக்கள் 41% வீதத்தாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக களை பிடுங்கப்பட்ட நிலப்பரப்புக்கள் 899 ஹெக்ரயார்களாகும். அது வருடாந்த இலக்கு நிலப்பரப்புக்களின் அதாவது 840 ஹெக்யாரின் 107% வீத முன்னேற்றமாகும். 2014 ஆண்டின் வருடாந்த இலக்கின் 50% வீத முன்னேற்றம் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது களை பிடுங்கல் தொடர்பான முன்னேற்றம் 13% வீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் நிலப்பரப்பு 457 ஹெக். குறைவடைந்திருந்தது. இதற்கு முக்கிய காரணம் தேயிலை மற்றும் இறப்பர் புனர்ஜீவன செயற்திட்டத்தின் கீழ் 1655 ஹெக். களை பிடுங்கும் இலக்கொன்றைத் தாபிப்பதன் காரணமாக நிறுவன மீள் பயிர் செய்கையில் களை பிடுங்கும் இலக்கு 840 ஹெக். வரை வீழ்ச்சியடைந்துள்ளன. 2016 ஆண்டில் களை பிடுங்கல் தாபன இலக்கு ஹெக். 1450 ஆகும்.

2017 ஆம் ஆண்டில் மண் வளப்படுத்தல் மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்புக்கள் 1039 ஹெக்ரயார்களாகும். இது 2016 ஆம் ஆண்டில இந் நிலப்பரப்பு 868 ஹெக். ஆகும். அதற்கமைய 2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. அதாவது ஆண்டில் மண் வளப்படுத்தல் சார்ந்த வருடாந்த இலக்காக கொள்ளப்பட்ட நிலப்பரப்புக்கள் ஹெக்ரயார் 1020 ஆக இருந்தமையால், அதன் பயன்விளைவு 102% ஆக காணப்பட்டது.

2017 ஆண்டில் தேயிலை மீள் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் 806 ஹெக்ரயார்களாகும். ஆண்டிற்கான இலக்கு 748 ஹெக்ரயார் ஆக இருந்ததுடன், இலக்காக கருதப்பட்ட ஹெக்ரயார் 1040 ஆகும். அதாவது 72% வீத முன்னேற்றமாகும். 2016 ஆம் ஆண்டிற்கு நிகராக பயிரிடப்பட்ட வீதம் 2% வீதத்தால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 09

## தேயிலை மீள் பயிரிடல் மானியத் திட்டம்
## 2016/2017 2014 / 2015 ஆண்டின் பௌதீக பயன்விளைவு (ஹெக்ரயார்)

| விடயம் | ஆண்டு | தாழ்நிலம் காலி | களுத் | மாத்தறை | ரத்தினபுரி | கேகாலை | மேட்டு / மத்திய நிலம் கண்டி | நுவரெலியா | ஊவா | மொத்தம் | வருடாந்த இலக்கு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேம்பாடு அதிகரித்த/ குறைந்த விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2016 | 2141 | 636 | 2811 | 2093 | 716 | 1254 | 814 | 938 | 11403 | 17340 | 18 |
| | 2017 | 3204 | 570 | 3505 | 2833 | 584 | 1795 | 1503 | 1573 | 15567 | 12530 | 37 |
| 2. விநியோகித்த அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | 2016 | 2112 | 632 | 2752 | 1988 | 654 | 1164 | 794 | 980 | 11076 | 13895 | 23 |
| | 2017 | 2687 | 569 | 3133 | 2142 | 552 | 1534 | 1095 | 1233 | 12945 | 10662 | 17 |
| 3. அனுமதிச் சீட்டுக்களில் உள்ளடக்கப்பட்டநிலப்பரப்புக்கள | 2016 | 508 | 192 | 571 | 486 | 179 | 305 | 158 | 198 | 2597 | 2215 | 14 |
| | 2017 | 618 | 196 | 680 | 591 | 154 | 361 | 225 | 229 | 3054 | 1265 | 18 |
| 4. மண் வளப்படுத்தல்- | 2016 | 297 | 100 | 284 | 267 | 95 | 135 | 63 | 96 | 1356 | 1450 | 14 |
| | 2017 | 157 | 118 | 152 | 167 | 105 | 102 | 37 | 60 | 898 | 840 | (34) |
| 5. மண் பதப்படுத்தல்- தவணை 1 | 2016 | 255 | 79 | 250 | 219 | 92 | 96 | 46 | 71 | 1108 | 1200 | 18 |
| | 2017 | 198 | 78 | 184 | 210 | 86 | 93 | 39 | 65 | 953 | 852 | (14) |
| 6. மண் பதப்படுத்தல்- தவணை 11 | 2016 | 183 | 62 | 184 | 177 | 58 | 89 | 47 | 67 | 867 | 900 | 3 |
| | 2017 | 241 | 69 | 237 | 221 | 90 | 84 | 39 | 58 | 1039 | 1020 | 20 |
| 7. தேயிலை மீள்பயிரிடல் | 2016 | 160 | 44 | 169 | 147 | 60 | 61 | 39 | 53 | 733 | 1000 | (9) |
| | 2017 | 163 | 47 | 166 | 134 | 68 | 71 | 38 | 61 | 748 | 1040 | 2 |
| 8. ஓராண்டுக்குப் பின்னரான பராமரிப்பு | 2016 | 181 | 50 | 195 | 155 | 48 | 67 | 43 | 72 | 811 | 950 | 0.4 |
| | 2017 | 139 | 41 | 159 | 111 | 58 | 62 | 28 | 57 | 655 | 750 | (19) |
| 9. வழங்கப்பட்ட பயிர் செய்கை மானியம் (மில். ரூபா) | 2016 | 106.92 | 34.85 | 106.62 | 96.77 | 34.20 | 46.89 | 23.50 | 38.13 | 487.88 | 546.00 | 16 |
| | 2017 | 100.97 | 36.59 | 94.36 | 91.40 | 44.22 | 43.79 | 19.49 | 29.77 | 460.59 | 466.10 | (5.6) |

**உருப்படம் இல.- 09**




தேயிலை மீள் பயிரிடல் உதவிபெறுநர்கள் தொடர்பாக 2017 ஆண்டில் ரூபா 460.59 மில்லியன் செலுத்தப்பட்டது. 2016 ஆண்டுடன் ஒப்பிடும் போது உதவு தொகை ரூபா 27.29 மில்லியன் அல்லது 5.6% இனால் குறைவடைந்திருந்தது.

### 3.1.2 தேயிலை புதிதாக பயிரிடல் உதவித்திட்டம்

2003 ஆம் ஆண்டிலிருந்து கொள்கைத் தீரமானத்தின் படி இடைநிறுத்தப்பட்ட தேயிலை புதிதாக பயிரிடல் தொடர்பான உதவித்திட்டம் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீள அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பதிலீட்டு பயிர்கள் மற்றும் வருமான வழிவகையற்ற பிரதேசங்கள் தொடர்பாக வரையறுக்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளின் கீழ் தேயிலை புதிதாக பயிரிடல் தொடர்பாக நிதியேற்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. புதிதாக தேயிலை பயிரிடுவது தொடர்பாக அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உச்ச நிலப்பரப்பு 01 ஏக்கர் ஆகும். 2015.01.01 ஆந் திகதியில் இருந்து புதிதாக பயிரிடல் தொடர்பாக வழங்கப்பட்ட மானியத் தொகை ஒரு ஹெக்ரயாருக்கு ரூபா 400,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**உருப்படம் இல.- 10**




**பயன்விளைவு**

2017 ஆம் ஆண்டில் தேயிலை புதிதாக பயிரிடல் தொடர்பாக 2508 விண்ணப்பங்கள் கிடைத்தன. விண்ணப்பங்களின் எண்ணிக்கை இலக்கு 2983 ஆகும். வரையறுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை கவனத்திற்கொண்டு 2324 பேருக்கு அனுமதிச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன.

200 ஹெக்ரயார் தரைச் செப்பனிடல் இலக்காக காணப்பட்ட போதிலும் 211 ஹெக்ரயார் தரைச் செப்பவனிடல் பணிகள் முடிவடைந்துள்ளன. அதாவது இலக்குக்கு அமைய முன்னேற்றம் 106% வீதம் ஆகும். ஆண்டில் தேயிலை புதிதாக பயிரிடல் தொடர்பான இலக்கு 200 ஹெக்ரயார் ஆக இருந்ததுடன் 202 ஹெக்ரயார் தேயிலை புதிதாக பயிரிடப்பட்டு 101% மேம்பாட்டினை அடைந்திருந்தது.

2017 ஆண்டில் தேயிலை புதிதாக பயிரிடல் தொடர்பாக செலுத்தப்பட்ட முழுத் தொகை ரூபா 63.71 மில்லியன் ஆகும். 2016 ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகை 31% வீதத்தால் அதிகரித்திருந்தது.

அட்டவணை 10

## தேயிலை புதிதாக பயிரிடல் தொடர்பான மானியத் திட்டம்
## 2016/2017 ஆண்டின் பௌதீக பயன்விளைவு (ஹெக்ரயார்)

| விடயம் | ஆண்டு | தாழ்நிலம் | | | | | மேட்டு / மத்திய நிலம் | | | மொத்தம் | இலக்கு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் மேம்பாடு அதிகரித்த/குறைந்த விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காலி | களுத் | மாத்தறை | இரத்தினபுரி | கேகாலை | கண்டி | நுவரெலியா | ஊவா | | | |
| 1 கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2016 | 5 | 446 | 3 | 2 | 67 | 8 | 6 | 8 | 545 | 1515 | (88) |
| | 2017 | 283 | 457 | 391 | 219 | 582 | 243 | 230 | 103 | 2508 | 2983 | 128 |
| 2. விநியோகித்த அனுமதி சீட்டுக்களின் எண்ணிக்கை | 2016 | - | 450 | - | - | 0 | 1 | 1 | 6 | 458 | 1350 | (89) |
| | 2017 | 281 | 453 | 373 | 202 | 507 | 207 | 191 | 110 | 2324 | 1851 | 134 |
| 3 நிலம் செப்பனிடல் | 2016 | 4.9 | 75.0 | 2.6 | 3.6 | 12.6 | 1.6 | 1.3 | 1.7 | 103 | 127 | (79) |
| | 2017 | 25.7 | 41.7 | 36.9 | 22.4 | 53.7 | 13.5 | 10.7 | 6.4 | 211 | 200 | 69 |
| 4 பயிர்செய்கை | 2016 | 4.5 | 73.0 | 2.6 | 8.1 | 13.0 | 2.2 | 1.3 | 4.8 | 109 | 104 | (77) |
| | 2017 | 23.7 | 41.3 | 36.4 | 20.1 | 53.7 | 11.7 | 9.3 | 5.9 | 202 | 200 | 60 |
| 5. வழங்கப்பட்ட மானியம் (மில். ரூபா) | 2016 | 40.8 | 109.0 | 48.6 | 90.0 | 63.3 | 13.0 | 3.5 | 10.7 | 378.9 | 269 | 25 |
| | 2017 | 19.6 | 51.2 | 8.1 | 29.8 | 7.8 | 1.7 | 0.11 | 4.8 | 123 | 166 | (102) |
| | 2016 | 4.88 | 24.59 | 1.85 | 5.18 | 7.34 | 0.76 | 0.36 | 1.77 | 46.72 | 49.77 | (64) |
| | 2017 | 9.2 | 14.17 | 10.28 | 6.96 | 15.21 | 3.44 | 2.59 | 1.85 | 63.71 | 71.12 | 31 |

உருப்படம் இல - 11




2006 ஆண்டிலிருந்து 2010 வரை புதிதாக தேயிலை பயிரிடல் மானியத் திட்டம் செயற்படவில்லை.

### 3.1.3 பயிர் புனர்ஜீவன மானியத் திட்டம்

உற்பத்தித் திறன் அலகுகளை விருத்தி செய்யும் நோக்குடன் கொழுந்து பறிக்கப்படுகின்ற மொட்டுக்கள் காணப்படும் தேயிலை நிலங்களில் சிபார்சு செய்யப்பட்டுள்ளவாறு கத்தறித்தலின் போது தேயிலைச் செடிகளுக்கு இடையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல், மண் பாதுகாத்தல் முறைகள் (வடிகான் முறைமை, கல் மச்சுகள் என்பவற்றை பழுதுபார்த்தல்) மற்றும் நிழலாக்கல் அடங்கலாக ஏனைய பயிரிடல் முறைகளை ஒன்றிணைத்து மேற்கொள்ளுதல் (நிழலாக்கல், கத்தறித்தல், களைபிடுங்குதல்) ஆகியன தொடர்பாக பயிர் புனர்ஜீவன மானியத் திட்டத்தின் கீழ் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

தொடர்ந்தேச்சையாக பத்து (10) ஆண்டு காலப்பகுதியில் சிறப்பாக தேயிலைப் பயிர செய்கையை முன்னெடுக்கக் கூடிய நிலங்கள் இம் மானியத் திட்டம் தொடர்பாக சிபார்சு செய்யப்படுவதுடன். அதில் தேயிலை நிலங்களின் இரண்டாவது கத்தறிப்பு மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது, அல்லது பயிர்செய்கையில் ஈடுபட்டு 07 ஆண்டுகளைத் தாண்டியிருப்பின் மானியம் பெற்றுக்கொள்ள முடியும்.

இம் மானியத் திட்டத்தின் கீழ் குழுமங்களாக அமைந்துள்ள, இடைவெளிகள் நிரப்பப்பட்டு கொழுந்து பறிக்கப்படும் தேயிலை பயிர்செய்கைகளை மறுசீரமைத்தலை அடிப்படையாகக் கொண்டு மலைநாடு / மத்திய மலைநாடு ஏக்கருக்கு 1,000 செடிகள் மற்றும் தாழ் நிலத்தில் ஏக்கருக்கு 750 செடிகள் என உச்சளவின் கீழ் செடியொன்றுக்கு ரூபா 25/= வீதம் 2 தவணைகளில் மானியம் வழங்கப்படும்.

**பயன்விளைவு**

2017 ஆம் ஆண்டில் பயிர் புனர்ஜீவன மானியத் திட்டம் தொடர்பாக 2770 பேர் விண்ணப்பித்திருந்தனர். அதில் 2509 பேருக்கு அனுமதிச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது இலக்கு அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கையின் 110% வீத முன்னேற்றமாகும். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது விண்ணப்பங்களின் எண்ணிக்கை 30% வீதத்தால் அதிகரித்துள்ளதுடன், விநியோகிக்கப் பட்ட அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை 37% வீதத்தாலும் அதிகரித்திருந்தது.

முதலாந் தவணையை தாண்டிய செடிகளின் எண்ணிக்கை 564145 ஆகும். இது இலக்குச் செடிகளின் எண்ணிக்கையான 912500 செடிகளில் 62% வீத முன்னேற்றமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முதலாந் தவணையை தாண்டிய செடிகளின் எண்ணிக்கை 53% வீதத்தினால் அதிகரித்திருந்தது.

இரண்டாந் தவணையை தாண்டிய செடிகளின் எண்ணிக்கை 297068 ஆகும். இது இலக்குச் செடிகளின் எண்ணிக்கையான 360000 செடிகளின் 83% வீத முன்னேற்றமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இரண்டாந் தவணையை தாண்டிய செடிகளின் எண்ணிக்கை 20% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டிலும் பயிர் புனர்ஜீவனம் தொடர்பாக ரூபா 11.7 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 50% வீத அதிகரிப்பாகும்.

**அட்டவணை 11**

பயிர் புனர்ஜீவன மானியத் திட்டம்

## 2016 - 2017 ஆண்டின் பௌதீக பயன்விளைவு ( செடிகளின் எண்ணிக்கை)

| விடயம் | ஆண்டு | தாழ்நிலம் | | | | | மேட்டு / மத்திய நிலம் | | | மொத்தம் | இலக்கு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் மேம்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காலி | களுத் | மாத்தறை | இரத்தினபுரி | கேகாலை | கண்டி | நுவரெலியா | ஊவா | | | அதிகரித்த/குறைந்த விகிதம் |
| 1. கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2016 | 131 | 67 | 338 | 181 | 374 | 680 | 185 | 170 | 2126 | 2868 | (22) |
| | 2017 | 271 | 154 | 432 | 237 | 350 | 639 | 512 | 175 | 2770 | 2690 | 30 |
| 2. விநியோகித்த அனுமதி சீட்டுக்களின் எண்ணிக்கை | 2016 | 129 | 67 | 323 | 122 | 291 | 551 | 159 | 187 | 1829 | 2626 | 27 |
| | 2017 | 266 | 155 | 408 | 198 | 307 | 585 | 399 | 191 | 2509 | 2277 | 37 |
| 3. இலக்குச் செடிகளின் எண்ணிக்கை | 2016 | 40000 | 32000 | 85000 | 65000 | 65333 | 106000 | 50000 | 40000 | 483333 | 483333 | 73 |
| | 2017 | 100000 | 75000 | 90000 | 125000 | 110000 | 175000 | 137500 | 100000 | 912500 | 912500 | 89 |
| 4. முதலாம் தவணை வழங்கப்பட்டசெடிகளின் எண்ணிக்கை | 2016 | 25503 | 15383 | 80398 | 25657 | 59866 | 107246 | 26425 | 27398 | 367876 | 483333 | 19 |
| | 2017 | 54842 | 33697 | 86921 | 53617 | 104371 | 132371 | 55484 | 42842 | 564145 | 912500 | 53 |
| 5. இரண்டாம் தவணை வழங்கப்பட்டசெடிகளின் எண்ணிக்கை | 2016 | 21870 | 14920 | 36913 | 32438 | 19989 | 90779 | 9450 | 19980 | 246339 | 323000 | 23 |
| | 2017 | 34240 | 26768 | 60623 | 22830 | 42250 | 76969 | 12217 | 21171 | 297068 | 360000 | 20 |
| 6’ வழங்கிய மானியம் (ரூபா மில்லியன்) | 2016 | 0.928 | 0.379 | 1.59 | 0.777 | 0.851 | 2.269 | 0.351 | 0.651 | 7.800 | 10.48 | 21 |
| | 2017 | 1.193 | 0.772 | 1.82 | 1.050 | 2.320 | 2.744 | 0.969 | 0.833 | 11.701 | 17.29 | 50 |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

**உருப்படம் இல - 12**




**தரம் வாய்ந்த தேயிலைச் செடிகளை வழங்குதல்**

**மேம்படுத்தப்பட்ட புதிய தேயிலை வகைகளுடன் தாய்ச் செடி பாத்திகளைப் பேணல்**

தேயிலை உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் விருத்தி செய்து கொள்வது தொடர்பாக தேயிலை சிறு பற்றநில உரிமையாளர்களுக்கு தரம் வாய்ந்த நடுகைச் சாதனங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளை வழங்கி, தாய்ச் செடிகளைக் கொண்ட நாற்றுமேடைகளை பேணுவது நிறுவனத்தின் நோக்கமாகும்.

அதற்கமைய மேம்படுத்தப்பட்ட வகை ககளிலான தரம்வாய்ந்த தாய்ச் செடி பாத்திகள் நிறுவனத்தினால் பேணப்பட்டு வருவதுடன், சிறு தேயிலை பற்றுநில உரிமையாளர்களுக்கும் வணிக ரீதியான தேயிலை நாற்று மேடையாளர்களுக்கும், நிறுவனத்தின் நாற்றுமேடைகளுக்கும் 261,417 கிளைகள் வழங்கப்பட்டன. இத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2% வீதத்தால் அதிகரித்துள்ளது. தாய்ச் செடிகள் மூலம் மொட்டுக்களையுடைய கிளை உற்பத்தியின் இலக்கு 343,600 ஆகும். அதாவது 76% வீத முன்னேற்றமாகும். தாய்ச் செடிகளின் மூலம் மேம்படுத்தப்பட்ட மொட்டுகளையுடைய கிளை வகைகள் வழங்கப்பட்ட விதம் குறித்த முழுமையான தகவல்கள் அட்டவணை 8 - A இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வணிக ரீதியிலான தேயிலை நாற்றுமேடைகள்**

தேயிலை உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு தேயிலை சிறு பற்றநில உரிமையாளர்கள் செடிகளை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவது தொடர்பாக தரம்வாய்ந்த வணிக ரீதியிலான தேயிலை நாற்றுமேடைகளை நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தேயிலை நாற்றுமேடைகளாக பேணுவதும் கண்காணிப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

அதற்கமைய 2016/2017 தொடர்பாக பிராந்திய அலுவலகங்கள் வாயிலாக 487 வணிக ரீதியிலான தேயிலை நாற்றுமேடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அந் நாற்றுமேடைகளில் உள்ளடங்க வேண்டிய இயலளவு 19.15 மில்லியன் செடிகளாகும். இதனால் 380 நாற்றுமேடைகளில் முதலாவது பரிசீலனை மூலம் 6.29 மில்லியன் செடிகளும், 264 நாற்றுமேடைகளில் இரண்டாவது பரிசீலனை மூலம் 4.3 மில்லியன் செடிகளும், 71 நாற்றுமேடைகளில் மூன்றாவது பரிசீலனை மூலம் 1.12 மில்லியன் செடிகளும் சிபார்சு செய்யப்பட்டிருந்தன.

2017/2018 ஆண்டு தொடர்பாக வணிக ரீதியிலான 449 நாற்றுமேடைகள் ஆண்டிறுதியில் பதிவு செய்யப்பட்டிருந்தன. எதிர்பார்க்கப்பட்ட செடிகளின் இயலளவு 20.3 மில்லியன் ஆகும். 41 நாற்றுமேடைகளின் முதலாவது பரிசீலனை முடிவுறுத்தப்பட்டது.

அந் நாற்றுமேடைகளில் உறுதிப்படுத்தப்பட்ட செடிகளின் முழுவிபரங்களும் அட்டவணை 8-$C_1$ மற்றும் 8-$C_2$ இன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இல.12**

**வணிக ரீதியிலான நாற்றுமேடைகள் தொடர்பான**
**அனுமதிச் சீட்டுக்களின் விநியோகம் மற்றும் செடிகளின் இயலளவு**
**( 2016/2017 ) மற்றும் ( 2017/2018 )**

| மாவட்டம் | விநியோகிக்கப்பட்ட அனுமதிச்சீட்டுக்கள் | | செடிகளின் இயலளவு (மில்லியன்) | |
|---|---|---|---|---|
| | **2016/17** | **2017/18** | **2016/17** | **2017/18** |
| காலி | 101 | 114 | 3,921,250 | 6,044,470 |
| மாத்தறை | 143 | 187 | 4,201,000 | 6,209,000 |
| களுத்துறை | 23 | 35 | 1,614,000 | 1,665,000 |
| இரத்தினபுரி | 30 | 24 | 3175200 | 1,453,000 |
| கேகாலை | 12 | 20 | 870,000 | 1,425,000 |
| கண்டி | 93 | 53 | 3,428,000 | 2,968,000 |
| நுவரெலியா | 11 | 8 | 527,000 | 312,000 |
| ஊவா | 74 | 8 | 1,409,000 | 220,000 |
| **மொத்தம்** | **487** | **449** | **19,145,450** | **20,296,470** |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

**நிறுவன தேயிலை நாற்று மேடைகள்**

தேயிலை சிறு தேயிலை பற்றுநில உரிமையாளர்களுக்கு அவசியமான தேயிலைச் செடிகளை கொள்வனவு செய்யும் போது சந்தை கேள்வி விலைகளை கட்டுப்படுத்தவதுடன் தரம்வாய்ந்த செடிகளின் உற்பத்தியை பேணுவதை முன்மாதிரியாகக் கொண்டு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நிறுவனத்தினால் தேயிலை நாற்றுமேடைகள் பேணப்படுகின்றன.

அதற்கமைய 2016/17 ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பயிர்செய்கை போகங்கள் தொடர்பான 08 நாற்றுமேடைகளில் 1”227”856 மொட்டுத் தேயிலை உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. விற்பனை செய்யப்பட்ட மொத்த செடிகளின் எண்ணிக்கை 961”856 ஆகும். நாற்றுமேடை மட்டத்தில் செடியொன்றின் விற்பனை விலை அட்டவணை 8-ல சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

செடியொன்றுக்கான மதிப்பிடப்பட்ட சாதாரண செலவு ருபா 17.73 ஆக இருந்த போதிலும், செடியொன்றுக்கான உண்மையான செலவு ரூபா 15.61 ஆகும். சில நாற்றுமேடைகளில் மதிப்பிடப்பட்ட செலவை விட உள்ளபடியான செலவு குறைவாகவும், சில நாற்றுமேடைகளில் செலவு அதிகமாகவும் காணப்படுகின்றன.

**3.1.4 விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை பயிற்சித்திட்டங்கள்**

மீளாய்வாண்டு தொடர்பாக விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி ஆலேசானை தொடர்பான 7,044 நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. அந் நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்கு 179859 விவசாயிகளை கலந்துகொள்ளச் செய்வதாகும்.

தேயிலை சிறு பற்றுநிலங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு 2017 ஆண்டில் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 5807 ஆக இருந்ததுடன், அதில் 5575 நிகழ்ச்சித் திட்டங்களே நடைமுறைப்படுத்தப் பட்டன. அதற்கமைய இலக்கு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்பாடு 96% ஆகும். 134860 விவசாயிகள் கலந்துகொள்ள வேண்டும் என்பது இலக்காக கருதப்பட்டது. அதில் கலந்துகொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 144897 ஆக இருந்தது.

அட்டவணை இல.13 - i

**விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை – உற்பத்தித்திறன் விருத்தி**
**பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை - (1) மற்றும் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை - (2**

| ஶ்ரீ.காரியாலய | காலி | | மாத்தறை | | களுத்துறை | | இரத்தினபுரி | | கேகாலை | | கண்டி | | நுவரெலியா | | ஊவா | | மொத்தம் | | இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 |
| **நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | | | | | | | | | | | | | | |
| அனுமதிப்பத்திரதாரிகளுக்கு அறிவூட்டல் பயிற்சி | 54 | 1689 | 67 | 2338 | 36 | 988 | 56 | 2040 | 64 | 1960 | 124 | 3055 | 43 | 1308 | 32 | 649 | **476** | **14027** | **228** | **5599** |
| நூற்றுமேடைகளுக்கான பயிற்சி | 22 | 412 | 21 | 447 | 15 | 140 | 14 | 203 | 10 | 135 | 22 | 172 | 11 | 129 | 5 | 58 | **120** | **1696** | **151** | **1429** |
| வணிக நாற்றுமேடையாளர் களுக்கான பயிற்சி | 19 | 283 | 15 | 306 | 9 | 29 | 20 | 387 | 11 | 195 | 24 | 184 | 5 | 69 | 8 | 140 | **111** | **1593** | **141** | **1101** |
| தேயிலை மீள் பயிரிடல் தொடர்பான பயிற்சி | 62 | 1765 | 75 | 1970 | 36 | 1095 | 50 | 1226 | 27 | 544 | 47 | 884 | 31 | 659 | 26 | 699 | **354** | **8842** | **331** | **7037** |
| புதிதாக பயிரிடல் தொடர்பாக அனுமதிப்பத்திரதாரிகளுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட். | 17 | 325 | 49 | 1070 | 23 | 508 | 13 | 252 | 11 | 188 | 11 | 172 | 18 | 317 | 8 | 316 | **150** | **3148** | **232** | **4122** |
| கொழுந்து பறித்தல் பயிற்சி | 174 | 4375 | 141 | 3717 | 118 | 2541 | 193 | 4618 | 78 | 1998 | 126 | 2553 | 73 | 1798 | 87 | 2215 | **990** | **23815** | **1089** | **23206** |
| இயந்திரப் பயன்பாட்டு பயிற்சி | 20 | 606 | 22 | 1162 | 15 | 462 | 18 | 536 | 14 | 462 | 20 | 795 | 10 | 315 | 18 | 720 | **137** | **5058** | **144** | **7200** |
| **இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி** | 4 | 29 | 4 | 131 | 4 | 22 | 4 | 72 | 2 | 25 | 8 | 287 | 1 | 0 | 3 | 295 | **30** | **861** | **10** | **144** |
| குத்தறித்தல் தொடர்பான பயிற்சி | 96 | 2160 | 111 | 3045 | 66 | 1431 | 104 | 2332 | 63 | 1574 | 105 | 2511 | 52 | 1079 | 69 | 1991 | **666** | **16123** | **721** | **21955** |
| கத்தறிப்புத் திறன்விருத்தி பயிற்சி | 27 | 530 | 26 | 765 | 18 | 298 | 36 | 779 | 11 | 228 | 28 | 542 | 19 | 400 | 12 | 655 | **177** | **4197** | **155** | **2770** |
| பயிர் புனர்ஜீவனம் தொடர்பாக அனுமதிப்பத்திரதாரிகளுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட். | 19 | 357 | 21 | 431 | 8 | 141 | 11 | 218 | 9 | 254 | 9 | 168 | 14 | 348 | 7 | 324 | **98** | **2241** | **144** | **2500** |
| மண் முகாமைத்துவம் பற்றிய பயிற்சி | 161 | 4996 | 154 | 4306 | 97 | 2696 | 115 | 3415 | 69 | 1438 | 134 | 4573 | 44 | 1069 | 106 | 3307 | **880** | **25800** | **974** | **21155** |
| நிழலாக்கம் மற்றும் முகாமைத்துவப் பயிற்சி | 106 | 3106 | 111 | 2843 | 69 | 1569 | 114 | 2886 | 82 | 1822 | 135 | 3065 | 44 | 1112 | 76 | 2043 | **737** | **18446** | **803** | **18192** |
| முகாமைத்துவப் பயிற்சி | 49 | 1739 | 110 | 2903 | 74 | 2174 | 122 | 3686 | 77 | 1995 | 111 | 3178 | 46 | 1242 | 60 | 2133 | **649** | **19050** | **684** | **18450** |
| ‍ **மொத்தம்** | **830** | **22372** | **927** | **25434** | **588** | **14094** | **870** | **22650** | **528** | **12818** | **904** | **22139** | **411** | **9845** | **517** | **15545** | **5575** | **144897** | **5807** | **134860** |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

தேயிலை சிறுபற்றுநிலங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு உரியதான தேயிலை நிலங்களின் மண் மண்ணின் அமிலத்தன்மையை முறைப்படியாக பேண வேண்டியுள்ளதுடன், அது தொடர்பாக வருடாந்தம் மண்ணின அமிலத்தன்மைப் பரிசோதனைகள் தொடர்பாக 65810 மண் மாதிரிகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு பரிசோதிப்பது தொடர்பாக இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், ஆண்டில் 55138 (83.78)% மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

அட்டவணை இல.13 -ii

**தனி நபர் விஸ்தரிப்புப் பணிகளினதும் மண் பரிசோதனைகளினதும் எண்ணிக்கை**

| பிராந்தி அலுவலகம் | | காலி | மாத். | களுத். | கேகாலை | கண்டி | நுவரெ. | இர.புரி | ஊவா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முண் | இலக்கு | 11500 | 10000 | 6500 | 5000 | 8300 | 4000 | 12500 | 8010 | **65810** |
| பரிசோதனை | மேம்பாடு | 7208 | 10084 | 5796 | 5078 | 7583 | 4007 | 8012 | 7370 | **55138** |
| தனிநபர் | இலக்கு | 6900 | 6000 | 3900 | 3000 | 4500 | 2200 | 7500 | 3200 | **37200** |
| விஸ்தரிப்பு | மேம்பாடு | 6388 | 6108 | 4141 | 3121 | 3779 | 2204 | 4785 | 2847 | **33373** |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

## மத்தியகால பெறுபேறு - 02

### 3 ஆண்டுகளுள் தொழிற்சாலை மட்டத்தில் பச்சைக் கொழுந்தின் தரத்தை 60% வரை அதிகரித்தல

தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வருமானத்தை விருத்தி செய்யும் போது, அதிக விளைச்சல், குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் அதிகூடிய சந்தை விலை ஆகியன பிரதானமாக செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. உற்பத்திச் செலவை குறைத்துக் கொள்வதற்கு தேசிய உர மானியத் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் உரம் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் பச்சைக் கொழுந்துகளுக்கு அதிகூடிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு தரம் வாய்ந்த பச்சைக் கொழுந்து உற்பத்திகள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

கொழுந்தின் தரத்தை விருத்தி செய்வது தொடர்பாக 12107 கொழுந்து பறிப்பவர்களுக்கு பயிற்சி வழங்குதல், தரம் வாய்ந்த கொழுந்துகளை மட்டும் தொழிற்சாலைகள் ஊடாக பொறுப்பேற்றுக் கொள்வதைக் கட்டாயப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களை வகுத்தல், கொழுந்து வழங்குநர்களுக்கு பயிற்சியளித்தல், தரம்வாய்ந்த கொழுந்துகள் தொடர்பாக தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டல் ஆகிய நடவடிக்கைகள், அப் பெறுபேறுகளை பெற்றுக கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் செயன்முறைகளாகும். அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் கொழுந்தின் தரத்தை விருத்தி செய்யும் பொருட்டு 1093 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு இருந்ததுடன், 989 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று

| **செயற்பாட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | **2017** | **2016** |
|---|---|---|
| **பொதுவான பணிகளின் மிகை (பற்றாக்குறை)** | (129,533) | 3,323 |
| **பணம் அல்லாதவைகள்** | | |
| மீள்மதிப்பீட்டு வருமானம் | (13,440) | (10,413) |
| தேய்மானம் | 22,102 | 24,233 |
| பணிக்கொடை நிதியேற்பாடுகள் | 8,331 | 13,716 |
| சந்தேகத்திற்கிடமான கடன் ஏற்பாடுகளை அதிகரிப்பு/குறைவு | (1,222) | 716 |
| பதிவழிக்கப்பட்ட கடன்பெறுநர் | (1,364) | |
| எதிர்பாரா சந்தர்ப்பங்களுக்கான மானியம் | 2,352 | 600 |
| வட்டி வருமானம் | (8,494) | (2,306) |
| செலுத்தவேண்டிய நிதி அதிகரிப்பு /குறைவு | 218,117 | 35,108 |
| மீள்மதிப்பீட்டு நட்டம் | | |
| ஊழியர் கிரய அதிகரிப்புக்கான ஒதுக்கீடு | | |
| ஆதன, பொறித்தொகுதி உபகரண விற்பனையின் இலாபம் / நட்டம் | 32 | (66) |
| ஏனைய சொத்துக்கள் அதிகரித்தல் /குறைவடைதல் | 108 | (3,566) |
| வருமதிகள் அதிரித்தல் /குறைவடைதல் | (19,307) | 21,376 |
| பொருட் பட்டியல் அதிரித்தல் /குறைவடைதல் | (42,380) | (2,547) |
| **செயற்பாட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்** | 35,301 | 80,234 |
| **முதலீட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | | |
| பொறி, பொறித்தொகுதி கொள்வனவு | (46,141) | (63,784) |
| பொறி, பொறித்தொகுதி விற்பனை வருமானம் | 33 | 50 |
| **முதலீட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்** | (46,108) | (63,734) |
| வட்டி | 6,642 | 1,865 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (17,469) | (12,530) |
| **நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | (10,828) | (10,665) |
| அபிவிருத்தி செலவுகளுக்கான அரசாங்க மானியம் | (84,934) | 53,783 |
| **மூலதன மானியங்கள்** | 4,459 | 12,780 |
| **அரச பங்களிப்புக்கள்** | 21,006 | 58,600 |
| **நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | (59,469) | 125,163 |
| **காசும் காசு ஒப்புரவுகளினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | (81,103) | 130,998 |
| **குறித்த கால ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | 315,421 | 184,423 |
| **குறித்த கால முடிவிலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | 234,318 | 315,421 |

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
### 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
### தேறிய சொத்துக்கள் / நிதியீட்டல் உரிமை மாற்றக் கூற்று

ரூ.'000

| விபரம் | பங்களிப்பு மூலதனம் | உரிமையாளர்களின் கட்டுப்பாட்டு உரிமை மாற்றக் உரித்து | | | முழு தேறிய சொத்து/ உரித்து |
|---|---|---|---|---|---|
| | | பிற ஒதுக்கம் | மீ.மதிப். ஒதுக்கம் | திரண்ட மிகை (பற்றாக்குறை) | |
| 31/12/2016 இல் நிலுவை | 178,225 | 64,469 | 124,109 | (40,267) | 326,535 |
| ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை) | | | | (129,533) | (129,533) |
| ஆதன மீள்மதிப்பீட்டு இலாபம் | | | | | - |
| ஆண்டிற்கான அரசாங்க மானியம் | 21,007 | | | | 21,007 |
| அபிவிருத்தி செலவுகளுக்கான அரசாங்க மானியம் | (84,934) | | | | (84,934) |
| ஆண்டிற்கான பிற மானியம் | | | | | - |
| ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வருமானம் | (8,981) | (4,458) | | | (13,440) |
| | | | | | - |
| | | | | | - |
| 31/12/2016 இல் நிலுவை | 105,317 | 60,011 | 124,109 | (169,800) | 119,636 |

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

## 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
## நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்

குறிப்பு 1

ஆதனம், பொறியும் பொறித்தொகுதியும் 2017

ரூ.

| விபரம் | 2017.01.01 இல் கிரயம் | ஆண்டிற்கான கூட்டல் | மாற்றல்கள்/ அகற்றல் | 2017.12.31 இல் கிரயம் |
|---|---|---|---|---|
| காணி | 74,364,245.39 | - | - | 74,364,245.39 |
| கட்டிடங்கள் | 212,976,247.30 | 30,915,285.34 | - | 243,891,532.64 |
| மோட்டார் வாகனங்கள் | 69,705,153.61 | 1,325,572.61 | 402,750.00 | 71,433,476.22 |
| செயற்திட்ட மோட்டார் வாகனங்கள் | 13,945,935.00 | 4,004,750.00 | - | 17,950,685.00 |
| தளபாடங்கள் பொருத்துதல், அலுவலக | 31,070,963.14 | 4,364,240.20 | (364,942.59) | 35,070,260.75 |
| கணனிகள் | 25,409,248.36 | 1,839,265.50 | (504,572.00) | 26,743,941.86 |
| பொறியும் பொறித்தொகுதியும் | 597,729.00 | 3,691,730.00 | - | 4,289,459.00 |
| | | | | |
| மொத்தம் | **428,069,521.80** | **46,140,843.65** | **(466,764.59)** | **473,743,600.86** |

**தேய்மானம்**

ரூ.

| விபரம் | 2017.01.01 இல் தேய்மானம் | ஆண்டிற்கான தேய்மானம் | மாற்றல்கள்/ அகற்றல் | திரண்ட தேய்மானம் | பதிவழித்த பெறுமதி |
|---|---|---|---|---|---|
| காணி | 166,631.62 | 10,293.34 | - | 176,924.96 | 74,187,320.43 |
| கட்டிடங்கள் | 38,749,346.40 | 4,344,393.57 | - | 43,093,739.97 | |
| மோட்டார் வாகனங்கள் | 51,995,104.36 | 10,542,904.61 | 3,002.00 | 62,541,008.97 | 8,892,467.25 |
| செயற்திட்ட மோட்டார் வாகனங்கள் | 12,282,443.00 | 950,562.00 | - | 13,233,005.00 | 4,717,680.00 |
| தளபாடங்கள் பொருத்துதல், அலுவலக | 15,471,991.83 | 2,829,954.48 | (316,830.74) | 17,985,115.57 | 17,085,145.18 |
| கணனிகள் | 16,183,316.62 | 3,354,683.98 | (504,305.33) | 19,033,695.27 | 7,710,246.59 |
| பொறியும் பொறித்தொகுதியும் | 456,154.04 | 69,240.13 | - | 525,394.17 | 3,764,064.83 |
| | | | | | |
| மொத்தம் | **135,304,987.87** | **22,102,032.11** | **(818,134.07)** | **156,588,883.91** | **317,154,716.95** |

-

**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**

**2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்**

**குறிப்புக்கள்**

| விபரம் | ரூ. |
|---|---|
| **குறிப்பு 02** | |
| **முதலீடு** | 12,590,855.67 |
| நிலையான வைப்புக்கள் – பணிக்கொடை | 12,590,855.67 |
| | |
| **குறிப்பு 02 A** | |
| பிற நிதிச் சொத்துக்கள் | |
| எதிரீட்டுக் கிரயம் | 13,165,776.94 |
| | 13,165,776.94 |
| | |
| பிற நடமாடும் சொத்துக்கள் | |
| மொத்த நாற்றுக்கள் | 7,932,725.11 |
| | |
| **குறிப்பு 03** | |
| | |
| பொருட் கணிப்பீடு | |
| காகிதாதிகள் | 2,716,451.42 |
| நானாவித கையிருப்பு | 26,389,463.36 |
| தேயிலை | 460,234.48 |
| உரம் | 3,750.00 |
| பாசம்ட்/மெதும் சோடியம் | 135,180.47 |
| பொலித்தீன் | 740,306.69 |
| தெளிகருவி | 5,029.55 |
| நாற்றுமேடை உபகரணம் | 1,071,317.64 |
| கிராமிய அபி.செயற்திட்டகையிருப்பு | 26,107,733.13 |
| தராசு | 41,675.00 |
| கொழுந்து பறிக்கும் பிடி பாஸ்கட் | 247,692.20 |
| உதவிப் பக்கேஜ் | 512,881.09 |
| ரயர் மற்றும் ரியூப் | 331,947.21 |
| பயிற்சி உபகரணங்கள் | 3,982.50 |
| பிற கையிருப்புக்கள் | 63,538.30 |
| | 58,831,183.04 |
| **குறிப்பு 04 05** | |
| **பெறுவனவுகள்** | |
| | |
| கடன்பெறுநர் | 20,706,081.45 |
| கடன் மற்றும் முற்பணம் | 108,442,579.82 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 678,710.84 |
| பிற நிலுவை | 12,391,797.31 |
| | |
| **மொத்தம்** | 142,219,169.42 |
| கழிக்குக : அறவிடமுடியாக கடன் ஒதுக்கீடு | (21,557,633.49) |
| | |
| **மொத்தம்** | 120,661,535.93 |

| விபரம் | Rs. |
|---|---|
| **குறிப்பு 06** | |
| முற்கொடுப்பனவுகள் | 340,062.01 |
| | |
| **குறிப்பு 07** | |
| நிதி மற்றும் வங்கி  நிலுவை | 6,456,189.85 |
| நிதி மாற்றீடு | 69,225,308.50 |
| கையிருப்பு மற்றும் வங்கியிலுள்ள நிதி வைப்புக்கள் | 158,636,863.56 |
| **மொத்தம்** | 234,318,361.91 |
| | |
| **குறிப்பு 08** | |
| கொடுப்பனவுகள் | |
| கடன்பெறுநர் | 67,773,350.97 |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 3,990,875.10 |
| பிற ஒதுக்கீடுகள் | 4,280,819.82 |
| பிற நிலுவை | 158,634,679.66 |
| **மொத்தம்** | 234,679,725.55 |
| | |
| **குறிப்பு 09** | |
| திரண்ட செலவுகள் | |
| ஆண்டிற்கான சுற்றுலா | 190,000.00 |
| தொழிற்சங்கம் | 7,254.00 |
| ஊ.சே. நி. மற்றும் ஊ. ந. பொ. நிதியம் | 6,168,428.99 |
| மின்சாரம் | 211,169.12 |
| கணனி பராமரிப்பு | 203,890.00 |
| கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் | 150.00 |
| கட்டணங்களும் வரிகளும் | 53,766.37 |
| எரிபொருள் | 858,970.12 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 6,336.23 |
| மருத்துவ  வசதிகள் | 644,610.81 |
| மோட்டார் சைக்கிள் பராமரிப்பு | 269,350.00 |
| உந்துருளி பராமரிப்பு | 17,160.00 |
| நலன்புரி | |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 65,172.22 |
| மேலதிக நேரம் | 384,884.99 |
| அஞ்சல் கட்டணம் | 20,956.00 |
| வாடகை | 519,445.50 |
| சம்பளம் மற்றும் வேதனம் | 1,255,175.45 |
| பாதுகாப்பு | 427,885.53 |
| ஈட்டப்பட்ட வாடகை | 21,112.56 |
| பத்திரிகை விளம்பரம் | 477,595.00 |
| கட்டிட துப்புரவு/பேணல் பணிகள் | 242,046.03 |
| இலவசமாக வழங்கப்படும் தேநீர் | 1,178.00 |
| தொலைபேசி | 464,985.21 |
| T.S.H.S.F. | |
| போக்குவரத்துக் கட்டணம் | 61,500.00 |
| போக்குவரத்து மற்றும் பிழைப்பூதியம் | 1,311,649.73 |
| சட்ட அலுவல்கள் | 975,430.46 |
| சபை அங்கத்துவ நிர்வாக கட்டணம் | 77,233.60 |
| சீருடை மற்றும் சப்பாத்துக்கள் | 39,005.00 |

| விபரம் | Rs. |
|---|---|
| காகிதாதிகள் | 95,550.71 |
| நூலகம் | 47,000.00 |
| நீர் | 39,419.29 |
| வாகனப் பராமரிப்பு | 1,068,144.00 |
| தபால் கட்டணம் | 86,175.00 |
| மீள நாற்று நடுகைக்கான மானியம் | 182,142,897.76 |
| புதிய நாற்று நடுகைக்கான மானியம் | 35,123,391.85 |
| பயிர் மறுசீரமைத்தல் | 6,627,073.00 |
| உர மானியம் | 5,095,883.50 |
| வங்கி கட்டணம் | 5,612,064.00 |
| விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 771,870.00 |
| செயற்பாட்டு வரி | 580,000.00 |
| டொலமைட் மானியம் | 117,010.00 |
| நானாவித | 464,049.88 |
| நாற்றுமேடை மற்றும் தாய்ச் செடி | 326,018.10 |
| பிற | 402906.64 |
| | 253,575,794.65 |
| **குறிப்பு 10** | |
| ஊழியர்களுக்கான நலன்கள் (பணிக்கொடை) | 157,103,352.56 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } பீஎல்ஏ/பீ/ரீஎஸ்எச்டிஏ/01
My No.
2017/எப்ஏ/08

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2018 ஆகஸ்ட் 28
Date

16 OCT 2018

12 OCT 2018

தலைவர்,
சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை.

**சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 35 ஆம் இலக்க சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் இது தொடர்பான விபரமான அறிக்கை 2018 மே 31 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை சிறு தோட்ட அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்காக வினைத்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 41,661,551 தொகையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டன. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

அதிகாரசபையால் மீளப்பட்டியல்படுத்தப்பட்ட கடனின் கீழ் தே சக்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒரு வாகனம் கடனைத் திருப்பிச் செலுத்தாதன் காரணமாக கடன் பணத்தை அறவீடு செய்வதற்காக அதிகாரசபையால் அவ்வாகனம் விற்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து கிடைத்த ரூபா 672,000 தொகையான இலாபம் தேயிலை சக்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தது.

2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கிடைக்க வேண்டிய 07 மீதிகளின் மொத்த பெறுமதி ரூபா 89,112,762 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 89,849,404 ஆக இருந்ததனால் ரூபா 736,642 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 5 ஆண்டுகளை மிகைத்து கிடைக்க வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 21,071,890 ஆக இருந்ததுடன் அம் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கணக்குகளில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டிருந்தன. அம்மீதிகளில் ரூபா 17,016,838 மொத்த தொகையான மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களுக்காக பசளை, பசளை தெளிக்கும் இயந்திரம், தராசு என்பன கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 4,436,965 அறவீடு செய்யப்பட்ட வேண்டியிருந்ததுடன் இது 12 ஆண்டுகளை மிகைத்துக் காணப்பட்டது.

(ஆ) 1998 ஆம் ஆண்டின் போது சிய தேயிலைத் தோட்ட சங்கங்களுக்காக கடன் அடிப்படையில் வாகனங்களை வழங்கியமை தொடர்பாக வழங்குவதற்காக அதிகாரசபையால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,663,284 அறவிட வேண்டியிருந்ததுடன் அந்த மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த ஆண்டின் போதே வர்ணம் கலக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 4 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 5,916,589 பணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் முறைப்படியான உடன்படிக்கை இல்லாமையின் காரணமாக கடனை அறவீடு செய்தல் சிக்கலுடையதாகக் காணப்பட்டது.

16 OCT 2019

12 OCT 2019

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் நிதிவிளைவுகள் ரூபா 129,532,198 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,322,996 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 132,855,194 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவுகள் ரூபா 81,224,000 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட பற்றாக்குறை

2016 ஆம் ஆண்டின் போது மிகையாக மாறியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது மீண்டும் பற்றாக்குறையாகியிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் மிகையூதியம், நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது அதிகாரசபையின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை சாதகமான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் ரூபா 420,947,000 ஆக இருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 127,723,000 வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அதிகார சபையின் நடைமுறை விகிதம் 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே 0.86:1 மற்றும் 1.65:1 ஆக இருந்தன. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறையற்ற விகிதம் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.3 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்.

அதிகாரசபையின் ஊழியர்களால் அதிகார சபைக்கு எதிராக 06 வழக்குகளும் அதிகார சபையினால் ஊழியர்களுக்கு எதிராக 02 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அவ்வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

அதிகார சபையைத் தோற்றுவித்த குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 1040 ஹெக்டயர்கள் அளவான தேயிலை மீள் பயிர்ச்செய்கை இலக்குகளில் 748 ஹெக்டயர்கள் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிலிருந்து தேயிலை மீள் பயிர்செய்கை நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகார சபை வழங்கிய உத்தரவுப்பத்திரங்களின் அளவு வருடாந்தம் அதிகரித்திருந்தும் தேயிலைப் பயிர்செய்கையாளர்களால் நிலத்தை தயார்ப்படுத்தல், மண்

பாதுகாப்பு என்பவற்றின் பின்னர் தேயிலை மீள் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுதல் வீழ்ச்சியடைந்திருந்தது. நிவாரணம் பெறுபவர்கள் அதற்காக ஈடுபடுவதற்கு அதிகார சபை போதிய நடவடிக்கை எடுக்காமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பயிர் மீள் நடுகைக்கான நிவாரணமாக ரூபா 11,701,644 தொகை சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 40 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், அந்த நிவாரணப் பணத்தில் மீளாய்வாண்டிற்காக 912,500 நாற்றுக்கள் பயிர் மீள் நடுகைக்காக இலக்கிடப்பட்டிருந்தும் அவற்றில் மீள் நடுகை செய்யப்பட்டிருந்த நாற்றுக்களின் அளவு 564,145 ஆகும். அதற்கிணங்க செயலாற்றல் 62 சதவீதம் மாத்திரமாகும்.

(இ) மீளாய்வாண்டின் போது விவசாயிகளுக்கு 1035 மெட்ரிக் தொன் டொலமயிட்கள் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததும் 25.3 மெட்ரிக் தொன்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது இலக்கிடப்பட்ட அளவில் 2.4 சதவீதமாகும். இதற்கிணங்க வெற்றிகரமான ஒரு பயிர்ச் செய்கைக்கு டொலமயிட் பயன்படுத்துதல் மிகவும் முக்கியமானதாக இருந்த போதிலும் டொலமயிட் பயன்படுத்துதல் தொடர்பாக சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நாட்டத்தை அதிகரிப்பதற்காக அதிகார சபையால் போதியளவு முயற்சிகள் எடுத்திருக்கவில்லை.

(ஈ) விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மண் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16,561,557 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 9,766,842 ஆல் அதாவது 143 சதவீதத்தால் ஒரு அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அதிகார சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நடாத்தப்பட்டட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் அளவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(உ) சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் தேயிலை உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்காக அத்தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பசளை நிவாரணத்தைப் பரிந்தளிப்பதற்காக அதிகார சபைக்கு ரூபா 914,568,156 கிடைத்திருந்தும் மீளாய்வாண்டின் போது தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட பணம் ரூபா 902,019,098 ஆகும். மிகுதிப் பணமான ரூபா 7,407,098 வழங்கப்படாது தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் நிறுத்திவைத்திருந்தன. பசளைக்காக நிதி

நிவாரணங்களை வழங்கும் போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2016 யூன் 03 ஆந் திகதிய MPI/DEV-01/08/FERTILIZER/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணான சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(i) சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் பசளை நிவாரணங்களை வழங்குவதற்காக இருக்க வேண்டிய ஆகக் குறைந்த காணித்துண்டின் அளவு 20 பேச்சர்ஸ் மற்றும் உச்ச அளவு 01 ஹெக்டெயருக்கு குறைவாக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக காலி பிராந்திய அலுவலகத்தின் மூலம் ரூபா 100,696 செலுத்தப்பட்டிருந்தது.

12 OCT 2018

(ii) சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விவசாயிகளால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டட தகவல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பினன்ர் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாததன் காரணமாக ரூபா 21,183,489 தொகையான கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட காசோலைகள் மறுக்கப்பட்டிருந்தன.

16 OCT 2018

(iii) சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் நிவாரணத்திற்கு தகமை பெற்ற விவசாயிகளின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு பட்டோலை அதிகாரசபையின் இணையதளத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் தேயிலை நாற்றுக்களைக் கொள்வனவு செய்யும் போது தரமான தேயிலை நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்கும் சந்தை விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குமாக அதிகாரசபையினால் பேணப்பட்டு வருகின்ற நிறுவனத்தின் தேயிலை நாற்றுமேடை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாற்று மேடை முகாமைத்துவ ஆலோசனைக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் நாற்று மேடைகளில் தேயிலை நாற்றுக்கள் இறக்கும் சதவீதத்தை 10 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் பேண வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஹெடிகல்ல வலஹந்துவ, மாவரல ஆகிய 03 நாற்று மேடைகளில் நாற்றுக்கள்

இறக்கும் சதவீதம் முறையே 25.7 சதவீதம், 31.4 சதவீதம் மற்றும் 35.6 சதவீதங்களாகும்.

(ii) பிரதிப் பொது முகாமையாளரின் (விஸ்தரிப்பு) 2005 செப்தெம்பர் 22 ஆந் திகதிய விஸ்/4/1 ஆம் இலக்க ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நாற்றுமேடைகளில் ஈடுபடுத்தப்பட்ட நாற்றுக்களின் ஆகக் குறைந்த விற்பனை 85 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் 2016/2017 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபையினால் பேணப்பட்டு வருகின்ற 08 நாற்று மேடைகளில் 05 நாற்று மேடைகளில் அவ்விற்பனைச் சதவீதத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் அந்த நாற்று மேடைகளின் விற்பனை 48 சதவீதம் 49 சதவீதம், 64 சதவீதம், 74 சதவீதம், 77 சதவீதம் ஆக இருந்தன.

(iii) சேவைகளை வழங்கும் குறிக்கோளுடன் நாற்று மேடைகள் பேணப்பட்டு வருகின்ற போதிலும் ஆகக் குறைந்தது உற்பத்திக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளையேனும் உள்ளடக்க வேண்டும். என தேயிலை நாற்று மேடை முகாமைத்துவ ஆலோசனைக் கோவையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஹெடிகல்ல, வலஹன்துவ, மாவரல் ஆகிய 03 நாற்று மேடைகளின் வருமானத்தை மிகைத்து ரூபா 1,045,513 செலவு செய்யப்பட்டிருந்தது.

(iv) தேயிலை உற்பத்தியையும் விளைதிறனையும் அதிகரிப்பதற்காக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு சிறந்த நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ளும் குறிக்கோளுடன் அதிகாரசபையின் மூலம் அதிகாரசபையில் பதிவுசெய்து கொண்ட வெளித்தரப்பினர்களின் வணிக நாற்று மேடைகள் பேணப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. வணிக தேயிலை நாற்று மேடைகளுக்காக வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 701, 487 மற்றும் 449 ஆல் குறைவடைந்து காணப்பட்டன. அதற்கிணங்க வணிக தேயிலை நாற்று மேடைகளுக்காக அதிகாரசபையின் முறையான மேற்பார்வை ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

12 OCT 2018
16 OCT

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பயிர்ச்செய்கை நிவாரணங்கள் வழங்கிய திகதியிலிருந்து 03 ஆண்டு காலத்திற்குள் நாற்று நடுகை பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு நாற்று நடுகையைப் பூர்த்திசெய்ய முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் போது பயிர்ச்செய்கை நிவாரணமாகச் செலுத்திய பணத்தை மீள அறவீடு செய்து கொள்வதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைகளுக்காக பணத்தைப் பெற்று பயிர்ச்செய்கை இடைநடுலில் கைவிட்ட அல்லது பயிர்ச்செய்கை அறிக்கைகளை அனுப்பிவைக்காத சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 8,494,376 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானத்திற்காகச் செலுத்த வேண்டிய வரியை இனங்கண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடைக் கொடுப்பனவு 30 நாட்களுக்குள் இடம்பெறவேண்டிய போதிலும் 2017 யூலை 17 ஆந் திகதி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு தாமதித்ததன் காரணமாக அது தொடர்பாக அதிகாரசபையினால் ரூபா 74,602 மிகைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையின் காலி பிராந்திய அலுவலகத்திற்குரிய வலஹந்துவ உப அலுவலகம், நாற்றுமேடை, அக்மீமன தாய்ப் பயிர் விஸ்தரிப்பு நிலையம் என்பன அமைந்துள்ள காணிகளின் உரிமையை அதிகாரசபை பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான 02 மோட்டார் சைக்கிள்கள் அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதன் உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

12 OCT 2018

16 OCT

12 OCT 2018

**4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்ட அதிகாரசபைக்குச் சொந்தமான 04 உத்தியோகபூர்வ இல்லங்கள் 05 ஆண்டுகள் காலமாக பாவணைக்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களைத் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 முறைப்படியாக பொறுப்பேற்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

04 பிராந்திய அலுவலகங்கள் ரூபா 23,280,986 பெறுமதியான காணிகளின் உரிமையை அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அக்காணிகளில் ரூபா 58,220,553 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மானிக்கப்பட்டிருந்தன.

**4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனத்தின் வளங்கள்**

அதிகாரசபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 250,150 செலவு செய்யப்பட்டிருந்தது.

16 OCT

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையால் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை 459 ஆக இருந்ததுடன் உள்ளபடியான எண்ணிக்கை 480 ஆகும். மேலும் 08 பதவிகளை வகிப்பவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமையாளர் (அபிவிருத்தி) மற்றும் முகாமையாளர் (பயிற்சி) பதவிகள் 2014 ஆம் ஆண்டிலிருந்தும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் 06 மாதங்கள் காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

12 OCT 2018

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது அமையம், செக்ரோல், மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபையால் முகாமைத்துவ உதவியாளர் (MA 1-2), சாரதி, அலுவலக பாதுகாப்பு உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக 51 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 7,900,689 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் ஆண்டறிக்கையின் பிரகாரம் வினைதிறனான விஸ்தரிப்புச் சேவைக்காக ஒரு விஸ்தரிப்பு உத்தியோத்தருக்கான விவசாயிகளின் எண்ணிக்கை 1:1000 ஆக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அப்பெறுமதி 1:2751 ஆக இருந்தது. அதற்கிணங்க ஒரு விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கு அதிக அளவான விவசாயிகளை மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தமை வினைத்திறனான விஸ்தரிப்புச் சேவைக்கு தடையாக இருந்தது.

(ஈ) முகாமையாளர் (அபிவிருத்தி) பதவி மற்றும் முகாமையாளர் (மனித வளங்கள்) பதவிக்காக பதில் கடமை நியமனம் வழங்கும் போது தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13:1:2 ஆம் பிரிவு மற்றும் 13:4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழ் புதிய தர முறைமைக்கு உள்ளீர்ப்புச் செய்யும் போது உதவி செயற்திட்ட முகாமையாளர், கனிஸ்ட முகாமையாளர் சேவைத் தரத்தில் JM(1-1) (11) பதினொராம் சம்பள படிநிலையில் அமர்த்த வேண்டியிருந்ததுடன் உழைத்த சம்பள ஏற்றங்களை வழங்க வேண்டியதானது பதவியுயர்வு கிடைக்காத நிரலின் கீழான சம்பள படிநிலையைப் பயன்படுத்தி எனக் காட்டப்பட்டிருந்ததும் இந்த உத்தியோகத்தருக்கு சம்பள கொடுப்பனவு செய்யும் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மேலதிகமாக சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

16 OCT 2018

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி

அதிகார சபையால் தமது நோக்கெல்லைக்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக எவ்வாறு அமுல்படுத்தப்படவேண்டும் என்பது தொடர்பாக தெளிவுப்படுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட நடவடிக்கைகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்தம் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஆயத்தமாகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்புகள் இல்லாததன் காரணமாக இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குத் திட்டங்களைத் தயாரிக்கும் மற்றும் முன் ஆயத்தங்கள் செய்யும் நடைமுறை மிகவும் தாமதமான நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

12 OCT 2018

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

16 OCT 2018

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்காக எதிர்ப்பார்க்கின்ற பெறுகை நடவடிக்கைகளை பிரதான பெறுகைத் திட்டத்தில் நிரல்படுத்தியிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 4.2.1 (உ) வழிகாட்டியின் பிரகாரம்

பிரதான பெறுகைத் திட்டமானது மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது தொடர்ச்சியாக நாளாதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட ரூபா 5,948,591 மொத்தப் பெறுமதியான 6 ஒப்பந்தங்களும் ரூபா 590,700 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்தல் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் பெறுகைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த ரூபா 14.8 மில்லியன் பெறுமதியான நிர்மாணங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகைக் கையேட்டின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்கள பெறுகைக் குழுத் தீர்மானத்திற்கு இணங்க ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் 05 ஆண்டுகளுக்கு ரூபா 12,000,000 தொகையான ஒரு வாகனத்தை கொள்வனவு செய்யும் போது அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை.

(ஈ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6.1 வழிகாட்டியின் பிரகாரம் 2.14.1 ஆம் பிரிவிற்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ள உள்ள பொருட்களுக்காக உரிய பெறுகைக் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்குடன் மாதிரிகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 609,348 தொகையான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக கேட்பு மனுக்களைக் கோரியதன் பின்னர் மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டின் போது நுவரெலிய மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 100,390,089 தொகையான விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை பெறுகைக் குழுவுக்கு பெறுகை வழிகாட்டிக் கையேட்டின் 2.7.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உரிய விடயம் தொடர்பான அறிவைக் கொண்டுள்ள நபர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவில் உரிய விடயம் தொடர்பான நிபுணத்துவம் மற்றும்

16 OCT 2018
12 OCT 2018

பெறுகைச் செயற்பாடு தொடர்பான போதிய அறிவைக் கொண்டுள்ள ஒரு நபரேனும் இருக்க வேண்டியதுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப மதிபீட்டுக் குழுவால் வெளி அங்கத்தவர் ஒருவரின் அல்லது நிறுவனங்களின் நிபுனத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதிகாரசபை தொடர்புபட்ட வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணையானது பொருட்களுக்காக கட்டளைகளை வழங்குவதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கொள்வனவு செய்யப்பட்ட 5000 லீற்றர் கொண்ட 20 நீர்த் தாங்கிகள் பகிர்ந்தளிக்கப்படாது 2018 மார்ச் 13 ஆந் திகதி வரை பிராந்திய அலுவலகத்திற்குரிய நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(iv) அதிகாரசபையின் புள்ளிவிபரத் தரவுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டளவில் நுவரெலிய மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை 16875 ஆக இருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 38970 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படாது மிகுதியாக களஞ்சியத்தில் காணப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 13467 ஆகும். அதற்கிணங்க தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டிய பொருட்களின் அளவு தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/.2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் புதிய வாகனங்களை அல்லது வாடகைக்குப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஓடிய தூரம் 1000 கிலோ மீற்றர்களுக்கு குறைவான பதிவுசெய்யப்படாத மோட்டார் வாகனத்தையே பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதிகாரசபையால் இம்முறைமையின் கீழ் ஒரு மாதத்திற்கு ரூபா 200,000 வீதம் 60 மாதங்களுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் வாகனம் தனிப்பட்ட ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஒரு வாகனமாகும்.

16 OCT
12 OCT 2018

(எ) மீளாய்வாண்டில் தலைமை அலுவலகம் மற்றும் ஹந்தானை பயிற்சி நிலையத்திற்காக பகல் இரவு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் இரவு பாதுகாப்புச் சேவையினை வழங்குதவதற்காக ரூபா 4,458,663 தொகைக்கு தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 5,011,149 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாத்தறை பிராந்திய அலுவலகத்தில் ரூபா 329,819 தொகை மற்றுமொரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்திற்கும் களுத்துறை மற்றும் ஊவ பிராந்திய அலுவலங்களில் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக ரூபா 796,874 தொகை அதிகாரசபையின் ஒரு ஊழியருக்கும் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.2.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

முன்னைய ஆண்டில் ரூபா 4,366,397 செலவு செய்து தலைமை அலுவலக காணியிலுள்ள பூங்கா அலங்காரம் செய்யப்பட்டிருந்ததுடன் கற்கள் பரப்பும் போது மண் போதியளவில் மட்டப்படுத்தப்பட்டு உரிய நியமத்தில் தயார்படுத்தப்படாததன் காரணமாக கற்கள் கீழே இறங்கிக் காணப்பட்டன. எவ்வாறாயினும், உரிய நிலப்பகுதியில் மீண்டும் கற்கள் பரப்புவதற்காக மீளாய்வாண்டின் போது நிறுத்திவைக்கப்பட்ட பணத்திலிருந்து அப்பணத்தை ஈடுசெய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 164,500 பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

12 OCT 2018

16 OCT

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 67 சதவீதத்திலிருந்து 86 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் பாதீட்டின் பிரகாரம் பயிர் மீள்நடுகை நிவாரணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 18.04 மில்லியன் பணத்தில் ரூபா 0.75 மில்லியன் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அது திருத்திய பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

7. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்** | **அவதானிப்பு** |
| --- | --- |
| (அ) ஆளணி நிர்வாகம் | பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படல், முறையான அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு இடம் பெறாமை. |
| (ஆ) நிவாரணக் கொடுப்பனவு | நிவாரணம் வழங்கப்பட்ட பின்னர் பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெறாமை |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | முறையாகச் சொத்துக்கள் பொறுபேற்கப்படாமை மற்றும் சொத்துக்களின் வினைத்திறன் காலம் மீளாய்வு செய்யப்படாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*k/y*

12 OCT 2018
16 OCT 2018